

நாகூர் நாதர்

ஆக்கம்,

K.E.S. சுல்தான் சாஹிபு.

நாகூர் நாதர்

ஆக்கம்

இம்மகானின் திருவழித் தோன்றல்

காத்திபு

K.E.S. சுல்தான் சாஹிபு (காதிரி)

மீரான் பதிப்பகம்

26, கலிபா சாயபு தெரு

நாகூர் - 611 002

நாகை மாவட்டம்

புகழுரை

மஹான் ஆண்டகையின் திருநாமம் - விளக்கம்

திருநாமம் (1)

மகா மேன்மை தங்கிய ஸெய்யித் ஷாஹுல் ஹமீது பாத்துஷா அவர்கட்கு அநேக திருநாமங்கள் இருக்கின்றன; அவைகளில் முதன்மையானதும், பிரசித்தி பெற்றதுமா யுள்ளது ''ஷாகுல் ஹமீது'' என்ற பெயராகும். ''ஷாஹ்'' என்ற பதம் பாரஸீகத்தின்படி 'அரசன்' என்று பொருள் படும். ஆனால் மார்க்க சாதுக்களால் புகழப்படும் சாந்தம், சற்குணம், சமய ஒழுக்கங்களும் ஒருங்கேயமைந்து, எளிய வர்களுக்கு அரசனானவன் மீதே உபயோகப் படுத்து கிறார்கள். 'ஹமீது' என்ற பதம் ''புகழ்பவன்'' ''புகழப் படுபவன்'' என்று பொருளுள்ளதாகும். நாயகம் (ஸல்) அவர்களின் திருமொழியின்படி பெயர்தனில் மகா உயர்வும், கண்ணியமும் பெற்றது, ''அப்து முஹம்மது'' அதாவது, அல்லாஹ்வின் திருநாமத்துடன் 'அப்து' என்னும் பதத்தைச் சேர்ப்பதாகும். உதாரணமாக, அப்துல்லா, அப்துர் ரகுமான், அப்துல் ஹமீது, அப்துர் ரஜ்ஜாக்கு, அப்துஷ் ஷுக்கூர் என்பன போன்றதாகும். அவ்விதமே ''முஹம்மது'' என்றதனா லேற்படும் வினைப் பிரிவுகளும். உதாரணமாக:- ''ஹம்து, அஹ்மது, ஹம்மாது, ஹாமீது, மஹ்மூது, ஹமீது'' என்பன வாகும். இவ்விருவகைத் திருநாமங்களும் இறைவனின் சொந்த அடியார்களுக்குப் பிரத்தியேகமான கௌரவத்தைத் தருகிறது. ஏனெனில், அடிமைத்தனம் அல்லாஹ்வின் பக்கம் முன்னேறுவதற்கான உயரிய அந்தஸ்துடையதா யிருக்கும். அப்து (அடிமை) என சொல்வதனாலேயே அவனின் சகல கருமங்களையும் சிரமேற் கொண்டவனாய் ''நீ எஜமான் நான் அடிமை. உனது ஏனைய சொற்களுக்கும் செவி சாய்ப்பேன்'' என்ற பொருள் ஏற்பட்டு விடுகிறது.

அப்துல் காதிர் என்ற நாமத்தின் கருத்து (2)

எல்லாம் வல்ல நாயன் அல்லாஹ் (ஜல்)வின் உயரிய அடிமையாக ஆய்விடுதனால், மற்ற எவர்களும் அடையாத சில விசேஷங்களைப் பெற ஹேதுவாகிறது மேலும் எவரும் அடையாத ''அவ்லியா'' என்னும் பெயரையே அன்னவர்கள் பால் வழங்கப்பெறுகிறது. மேலும் அன்னவர்கள் விஷய மாகவேதான் நாயன் தனது திருமறையில் பின்வருமாறு அருளியிருக்கின்றான்:- ''அல்லாஹ்வின் அவ்லியாக்களுக்குப் பயமென்பதில்லை; கிஞ்சிற்றும் அஞ்சுபவர்கள் அல்ல''.

''அவ்லியா'' என்ற பதமாகிறது, 'வலி' என்ற பதத்தின் பன்மையாக இருக்கும்; மேலும் அதிகாரி போன்ற பொருளாகும். சில மார்க்க சாதுக்கள் சொன்னது போன்று அல்லாஹுத்த ஆலாவை அஞ்சுவது கொண்டு அவன் மீது நம்பிக்கை வைப்பதில் அடிமையின் அந்தரங்க விஷய மாகிறது. அவன் ஏனைய விருப்பங்களை விட்டும், தனது வயிற்றை பரிசுத்தமாக்குவதாகும். இந்நிலைமையிலே தான் உள்ளவாறு இறைவனை அஞ்சும் சக்தி நிலைத்திருக்கிறது.

இவ்வித நிலைமையும், அடிமையின் அந்தரங்கங் களை செவ்வனே உணர்ந்ததனால் தான் ஷாஹ் ஹஜ்ரத் அவர்கள் ''அப்துல் காதிர்'' என்ற பெயருக்குரியவர் களாயினர் அதாவது ''காதிர்'' என்றால் சக்தி வாய்ந்தவன்; சகலத்தின் மீதும் சக்தி வாய்ந்தவனின் அடிமை என்றாகும் சாதாரணமாக உலகிற் காண்பது சகஜம்; அதாவது: செல்வமும் சிறப்பும், கௌரவமும் உடைய ஒருவனின் வேலைக்காரன், தன்னை மகா பிரமாதமாகப் போற்றித் திரிகிறான். ஏன்? தான் சகல அம்சமும் பொருந்திய ஒருவனின் அடிமையாக இருப்பதைக் கருதியேயன்றி வேறொன்றுமில்லை. அஃதே போன்று சகல சக்தியும் ஒருங்கேயமைந்து, அருள்மிகுந்த அன்புடையோனான அல்லாஹ் (ஜல்)வின் உண்மை அடிமையாக ஆனால், அம்மகத்தான பதவிக்கு ஓர் எல்லையுண்டோ! அச்சக்திக்கு

ஈடுண்டோ! இல்லவே இல்லை. தனது நாயனின் பேருதவி யினால் எவ்வித அற்புதங்களையும், நூதனங்களையும் உலகோர் வியக்கும்படி செய்யச் சக்தி வாய்ந்தவர்கள்.

"மீரான்" என்ற பதத்தின் கருத்து (3)

ஹஜ்ரத் அவர்களின் உயர் திருநாமங்களில் மூன்றாவது ''மீரான் சாஹிப்'' என்பதாகும். 'மீரான்' என்ற பதம் பாரஸீகத்தில், தலைவன் என்ற பொருளுடையதாகும். ஹஜ்ரத் அவர்கள் குணத்திலும், சொல்லிலும், செயலிலும் எவரிடமும் உச்ச ஸ்தானத்தையே பெற்று வந்ததுடன், சிறியோர், பெரியோர், கற்றோர், மற்றோர், எளியோர், பணக்காரர் என்ற பாகுபாடில்லாததனால் சொந்தமாக ஸூஃபி (சாது)க் கூட்டத்தினருக்குத் தலைவராயிருந்ததுமின்றி, பொது ஜனங்கள் போற்றும் உத்தமத் தலைவராகவும் இருந்தார்கள்.

"கஞ்ஜஸவாயீ" என்ற பதத்தின் கருத்து (4)

ஷாஹ் ஹஜ்ரத் அவர்களின் உயர் திருநாமங்களில் நான்காவது ''கஞ்ஜஸவாயீ'' என்பதாகும். 'கன்ஜு' என்பது பாரஸீக மொழியின்படி 'களஞ்சியம்' என்ற பொருளாகும். 'ஸவாயீ' என்பது எண்ணிக்கைப் பதங்களில் ஒன்றாகும். அதாவது:- ஒன்றும், கால்பாகமும், இவ்விரண்டும் சேர்ந்து ஒன்றேகால் என்று பொருளாகும். அதாவது: பிரதி தினமும் ஹஜ்ரத் அவர்களின் அந்தஸ்தும் மதிப்பும் வளர்ச்சி பெறுகிற தென்றும், ஏனைய அவ்லியாக்களும் வருணிக்க முனையுமுன் ஹஜ்ரத் அவர்களின் வருணனையே கால்பாகத்தின் வருணனை களை அதிகப்படியாய் வருணிக்க இடம் பெற்றிருக்கிற தென்றும் அல்லது அவர்களிடம் வேண்டப்படும் கரும மடங்கலும் கால்பாகம் அதிகமாகவே அடையப் பெற்றிருக்கிற தென்றும் சொல்லுவார்கள்.

ஆண்டகை என்பது என்ன?

"ஆண்டகை" என்ற தமிழ் கருத்திற்கு தத்துவஞான கருத்தும் பகிரங்க கருத்தும் கூறப்படுகிறது. 'ஆண்டகை' என்பது ஆண்மைத்தனத்தை குறிக்கிறது. மானிடப் பிறப்பின் தன்மை ஆண்மையாகும். ஒவ்வொரு மானிடனும் ஆண்மை யுடன் வாழ முயல வேண்டும். ஆண்மைத் தன்மையற்று வாழ்பவன் மனிதனல்ல, மக்களை மக்களாக்கிய அகில உலக பிரதிநிதி மஹான் ஷாகுல் ஹமீதாண்டகை அவர்கள் உதித்தது முதல் ஆண்தன்மையிலேயே வாழ்ந்து காட்டினார்கள். அதாவது, தான் ஆண்தன்மை நிறைந்தவர் களாயிருந்தும், மண வாழ்க்கையை வெறுத்தார்களல்லவா! ஆம்! இக்காரணத்தை அடிப்படையாகக் கொண்டே ஆண் தன்மைப்பண்பு ஆண்டகையாகும். அதாவது, தனக்கு ஆண் தன்மை நிறைய இருந்தும் மூவாசையை வெறுத்தார்கள். ஏன்? அதுவே ஆண்டகை என்பதை பகிரங்கப்படுத்துகிறது. அதாவது 'ஆண்ட' என்பது ஆண்மையைக் குறிக்கும். 'கை' என்பது, ஆண்மையில் தலைசிறந்தவர்கள். ஆண்மையில் வெற்றி கண்டவர்கள் என்பது வெளிப்படைக் கருத்தாகும். நம்மில் சிலர் 'ஆண்டகை' என்ற பதத்திற்கு அவரவர்கள் கருத்தில் உதித்த கருத்துக்களை கூறி வருகின்றனர். உண்மையான கருத்துக்களை மேலே படித்தீர்கள்.

வம்ச வழிமுறை

பிதா வழி

குத்புல் மஜீத் சையிது ஷாகுல் ஹமீது கஞ்ச ஸவாயீ கஞ்ச பக்ஷ் ஆண்டகையவர்கள் அரபிக் கோத்திரம், குரைஷிகுலம், ஹாஷிம் கிளையில் தோன்றிய பாதுஷா ஆவார்கள்.

நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்-ம்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் உடைய புதல்வர்களில் ஒருவரான ஹஸ்ரத்.

அபீ தாலிப்	(ரலி) இவர்கள்	புதல்வர்கள்
அமீருல் முஃமினீன் அலி	,,	,,
இமாம் ஹஸன்	,,	,,
சையிது ஹஸனுல் முதன்னா	,,	,,
சையிது அப்துல்லாஹில் மஹிலு	,,	,,
சையிது மூஸல் ஜௌன்	,,	,,
சையிது அப்துல்லாஹி	,,	,,
சையிது மூஸா	,,	,,
சையிது தாவூது	,,	,,
சையிது முகம்மது	,,	,,
சையிது யஹ்யா ஜாஹித்	,,	,,
சையிது அப்துல்லாஹ் ஜீலி	,,	,,
சையிது அபீஸாலிஹ் மூஸா ஜங்கி	,,	,,
சையிது முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி)	,,	,,
சையிது அப்துற்றஸ்ஸாக்தாஜுத்தீன்	,,	,,
சையிது இமாதுத்தீன் ஸாலிஹ்நஸர்	,,	,,
சையிது அபீ நஸ்ரு முஹ்யித்தீன்	,,	,,
சையிது முஹம்மதுஜௌஹர் அஹமத்	,,	,,
சையிது ஹஸனுல் பஃதாதி	,,	,,
சையிது முகம்மது பஃதாதி	,,	,,
சையிது அலி பஃதாதி	,,	,,
சையிது மூஸா	,,	,,

சையிது ஹஸன் குத்தூஸ், இவர்கள் புதல்வர்தான் நமது குத்புல் மஜீத் சையிது ஷாஹுல் ஹமீது பாஷா அவர்கள்.

அன்னை வழி

ஹஜ்ரத் அமீருல் முஃமீன் சையிதினா அலி (ரலி) அவர்களின் குமாரர்களில் அறுவரில் ஒருவரான:

ஹஸ்ரத் ஹுசைன் (ரலி)	இவர்கள்	புதல்வர்
ஹஸ்ரத் இமாம் ஜைனுல் ஆபிதீன்	,,	,,
ஹஸ்ரத் முஹம்மது பாகிர்	,,	,,
ஹஸ்ரத் இமாம் ஜஃபருஸ் ஸாதிக்	,,	,,
ஹஸ்ரத் முஹம்மது குறைஷிய்யி	,,	,,
சையிது அலாவுத்தீன்	,,	,,
சையிது கமாலுத்தீன்	,,	,,
சையிது அப்துல்லாஹ்	,,	,,
சையிது அத்தார்	,,	,,
சையிது தாஹிர்	,,	,,
சையிது முஹம்மது ஸானி	,,	,,
சையிது ஜமாலுத்தீன்	,,	,,
சையிது ஜமாலித்தீன்	,,	,,
சையிது அப்துல்லாஹ்	,,	,,
சையிது ஜமாலுத்தீன்	,,	,,
சையிது நிஃமதுல்லாஹ்	,,	,,
சையிது அப்துல்லாஹ்	,,	,,
சையிது பைஜுல்லாஹ்	,,	,,
சையிது அப்துல் ரஸ்ஸாஹ்	,,	,,
சையிது பக்ருத்தீன்	,,	,,

சையித் ஹமீதுத்தீன் இவர்கள் புதல்விதான் நமது குத்புல் மஜீத் ஷாஹுல் ஹமீது ஆண்டகையவர்களின் தாயார் அன்னை பாத்திமா என்பவர்களாகும்.

என்னுரை

இந்நூல் விண்ணகமும் மண்ணகமும் போற்றிப் புகழும் பெருமகான் ஷாஹுல் ஹமீது ஆண்டகையின் புனிதமிகு வாழ்க்கை வரலாற்றினை, ரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கும் அற்புதப் படைப்பு. அன்னாரின் பொன் மொழிகளும், ஆங்கிலத்தில் வரலாற்றுக் குறிப்புகளும் இந்நூலுக்கு சிறப்பு அணி செய்கின்றன. உங்கள் கரத்தில் தவழும் இந்நூல் நல்லோர்களின் ஆதரவால், நான்காம் பதிப்பாக வெளிவருகின்றது.

சிங்கை - மலேசியா - இலங்கை போன்ற நாடுகளில் இந்நூல் பாராட்டையும், மதிப்பையும் பெற்றுள்ளது. ஆதரித்த நெஞ்சங்கட்கும், வாழ்த்திய உள்ளங்கட்கும் என் நன்றி. சிறந்த முறையில் இந்நூலைத் திருத்தம் செய்து பாராட்டி வாழ்த்தும் என் அன்பு நெஞ்சங்களான என் தம்பி திருமிகு மௌலவி எஸ். அப்துல் வஹாப் (பாக்கவி), காரைக்கால் மு. சாயபு மரைக்காயர், சிங்கை தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் ஜே.எம். சாலிஹ்,எம்.ஏ., நாகூர் மு. ஜாபர் மெய்தீன், நாகை டி.கே.எம். காதர் ஆகியோருக்கும் என் உள்ளம் கனிந்த நன்றி.

''இந்ததிக்ருல் ஔலியாயீ - தன்ஜீலுற் றஹ்மத்தி'' இறைநேசச் செல்வர்களான மகான்களை நினைவுக் கூர்வதினால், இறைவனின் பேரருள் பொழிகின்றது என்ற மாபெரும் ஞான வள்ளல் ஜுனைதுல் பக்தாதி அவர்களின் பொன்மொழியை நாம் ஏற்று நடந்து இறைநேசச் செல்வர்களை நினைவு கூர்ந்து வாழ்வில் அனைத்து வளமும் நலமும் பேரருளும் பெற்றுத் திகழுவோமாக, ஆமீன்.

அன்புடன்

நாகூர்

2.9.2002

கே.யீ.யேஸ். சுல்தான் சாஹிபு

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

மகான் ஷாஹுல் ஹமீதின் பேரின்ப வாழ்க்கைச் சரித்திரம்

இஸ்லாத்தின் ஞான விளக்கைப் பரந்த உலகின் பல்வேறு பாகங்களுக்கும் எடுத்துச் சென்று, இருளகற்றி ஒளிவு பெறுமாறு செய்த பெருமை பல பெரும் மஹான்களுக்கே சாரும். தன்னலம் மறுத்து, மக்களுக்கு அறிவு புகட்டி, தொண்டு செய்வதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு ஊன் தீனற்று, உற்றார் உறவினரை வெறுத்து, இறைவனது வழி நடந்து, எல்லா உலகத்தையும் இன்ப வாழ்க்கையில் ஆழ்த்த நினைத்து, கடவுள் தொண்டாற்றிய அப்பெரும் மஹானின் மாண்பு போற்றத் தக்கது. அப்பெரும் மஹானின் நினைவுச் சின்னம் அவர்கள் இறந்தும், பல்லாண்டுகளுக்குப் பின்பும், அவர் தம் தொண்டின் பலன், பூத்துக் காய்த்துப் பழுத்துக் கனி தருகின்றது. அவர்கள் வாழ்க்கை உலக மக்களுக்கு ஒரு படிப்பினை. அன்னார் நடத்திக் காட்டிய வாழ்க்கை நம்மவர்க்கோர் எடுத்துக்காட்டு; மனித சமூகத்தார்க்கு முன் மாதிரி.

வெண்டிரை வீசும் வியன் நாகூர் அண்ணல், ஷஹின் ஷாஹே ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள், மனித சமூகத்தாருக்கும், முஸ்லிம் பெருங்குல மக்களுக்கும் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியது. மாணிக்கப்பூரில் பிறந்து கொஞ்சும் அரபி மொழி வல்லுநராய், தந்தை

தாயைத் துறந்து ஞானவழி நடக்கவிழைந்து, ஆண்டவன் பாதையில் இறங்கி, பிறந்தகம் (பிறந்த ஊர்) விட்டு வெளியேறிச் சென்ற பெருமானாரின் சரிதையை நினைக்க நினைக்க உள்ளத்தை உருக்குகின்றது.

“மாசற்ற பைம்பொன் மணிமாமுடி மன்னர் தாமும்
பாசத் தடைந்து பணிந்தேத்தும் அருண்மிக்க நாகூர்த்
தேசுற்ற கோயிற் சிறப்பெய்தியே வாழும் கோமான்
காசற்ற வொண்பூங் கழல்யா முடிகொண்டு தாழ்வாம்”

புலவர் பெருந்தகை வார்பூத்த முத்தமிழ் மாச்சலதி குலாம் காதிறு நாவலர் உருகி உருகி பாடுகின்றார். தந்தை வழி வந்த தனையன் அந்தகால அராபியரை அடக்கி, வெற்றிக்கொடி நாட்டிய வீரப் பெருந்தகை நபிகள் திலகம் பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்களின் பேரர்தான் ஷஹின் ஷாஹே ஷாஹுல் ஹமீது (றலி) ஆண்டவர்கள் வேறு எவ்வாறிருத்தல் சாலும்! பரம்பரை குணம். இத்தகைய பெருந்தகை சையிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் ஔலியா குத்பு என்று அழைக்கப்படுகின்ற இஸ்லாமிய பெரியோர்களில் தலைச் சிறந்தவர்கள். அரபி கோத்திரத்தில், குறைசிக் குலத்தில் ஹாஷிம் கிளையில் பிறந்தவர்கள். பெருமானார் முகம்மதுநபி (ஸல்) அவர்களின் பௌத்திரர். இப்பெரியார் அன்று தொட்டு, இன்று வரையிலும், முஸ்லிம் உலகில் மட்டுமேயன்றி, ஜாதி சமய பேதமின்றி எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டவர்கள்.

இப்பெரியார் ஹிஜ்ரத்து தொள்ளாயிரத்துப் பத்தாம் ஆண்டு மாணிக்கப்பூரில் பிறந்தார்கள். மாணிக்கப்பூர் இந்தியாவின் வட கிழக்கிலிருக்கும் அயோத்தி மாகாணத்தி லுள்ளது. அயோத்தியிலுள்ள பிரதான பட்டணங்களில் அலாஹாபாத் என்னும் பிரயாகை நகரத்தின் பக்கத்தி லுள்ளது. இவ்வூர் தமிழில் மாணிக்கப்புரம் என்று சொல்லப்படும். குத்புகள் அடலேறு ஷஹின் ஷாஹே ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் உரிய வயதை எய்தியதும்

பெற்றோர் அவர்களுக்கு மணம் முடிக்க விழைவு மிக்க உற்றனர். அழகிற் சிறந்த மணாளியைத் தம் அருமருந்தன்ன புதல்வருக்குப் பேசி முடிவும் செய்துவிட்டனர். அதையுணர்ந்த அண்ணல் அம்மணவினைக்கு (திருமணத்திற்கு) ஒருங்கப் பட்டார்களில்லை. தமது தந்தையை அருகிலழைத்து கீழ்க்கண்டவாறு கூறினார்கள்.

''அன்புடையீர்! உங்களுக்கு அடிபணிய வேண்டியது எளியேனின் கடமையே! ஆனால், எனது இயக்க ஒடுக்கங்க ளெல்லாம் எல்லாம் வல்ல எம்பெருமானின் ஆசை யிலேயே முழுகிக் கிடக்கின்றன. பெண்ணாசையுடையவரே மணம் செய்து கொள்ளுவதற்கு ஏற்றவர். அதில்லாத எனக்கு மணம் எதற்கு? தொண்டு செய்வதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டுள்ள எனக்குப் பெண் வேண்டிய தில்லை. என் மனம் இல்வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள வில்லை, என் செய்வேன்!'' இவ்வார்த்தைகளைக் கேட்ட பெருமானாரது பெற்றோர், ஆராத்துயரில் ஆழ்ந்தனர். எனினும் தம் புதல்வரை அதற்கு மேல் ஏதும் தொந்தரவைக் கொடுக்க விரும்பினார்களில்லை. இப்படி சில நாட்கள் சென்றன. தம் அருமைப் பெற்றோரிடம் விடை பெற்று, பல்வேறு நாடுகளையும் சுற்றி வர விரும்பிய பெருமானார், தாய் தந்தையரை மருங்கழைத்து வணங்கி ''பெரியோர்களே! தமியேன் பல ஊர்களையும் சுற்றி வர விழைகின்றேன். தேவரீர் இருவரும் மனமுவந்து எனக்கு உத்தரவு தர வேண்டும்'' என்று கேட்டார்கள். அதைக் கேட்ட அன்னை, தந்தை செல்வரை நோக்கி ''எங்கள் கண்மணியே! அப்துல் காதிரே, எல்லாம் வல்ல இறைவன் உமது விழாவை நிறைவேற்றுவானாக. உமது விருப்பப்படியே போய் வாரும்'' என்று கூறி விடை கொடுத்து அனுப்பினார்கள். பின்பு ஆண்டவர்கள் மாணிக்கப்பூரை விட்டுப் புறப்பட்டு, முதலில் மேற்கு திசை நோக்கிச் சென்றார்கள். ஆப்கானிஸ்தான், பெலுஜிஸ்தான், பாரீஸ், துருக்கிஸ்தான் முதலிய பல்வேறு தேசங்களுக்கும் சென்றார்கள். சென்ற

இடங்களில் எல்லாம் ஆத்ம ஜோதியின் திருவிளையாடல்கள், சன்மார்க்க போதனைகள், சடதத்துவமே சதமென்று (அதாவது உலகமே சதமென்று) நினைத்திருக்கும் மக்களின் கண்களைத் திறக்க வைக்கக் கூடிய அற்புத நிகழ்ச்சிகள்; காரணங்கள்; தீன் முழக்கம் அப்பெரியார் தம் இனிய சொற்பொழிவுகளைக் கேட்டு, உண்மையின் கூப்பாட்டுக்கு இணங்கி அளப்பரிய மக்கள் இஸ்லாத்தின் பக்கம் விரைந்து வந்தனர்.

இங்ஙனம் அப்பெருமானார் பல்வேறு நாடுகளையும் சுற்றிக் கொண்டு இறுதியில் துருக்கிஸ்தானிலுள்ள 'ஜபலுல் ஔலியா' என்னும் மலையில் தங்கியிருந்தார்கள். அக்காலை மாணிக்கப்பூருக்கு விரைந்து செல்ல வேண்டும் என்னும் எண்ணம் பெருமானார் தம் மனதில் தோன்றியது. உடனே தம்மைப் பின் தொடர்ந்து வரும் தபோதனர்களைப் பார்த்து, "நான் மாணிக்கப்பூருக்கு விரைந்து செல்ல வேண்டு மென்பதாய் ஏதோ ஒன்று என் உள்ளத்திலே கூறிக் கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு சக்தி என்னை அங்குச் செல்லுமாறு தூண்டுகின்றது. நீங்கள் என்னைப் பின் தொடர்வீர்களாக" என்று கூறி விட்டு, அம்மலையினின்று இறங்கி, மாணிக்கப்பூரை நோக்கி நடந்தார்கள். அவர்கள் மாணிக்கப்பூரைச் சென்று அடைந்தபோது வைகறைப் பொழுது, தம் இல்லத்திற்கு விரைந்து சென்ற பெருமானார் என்ன கண்டார்கள்? தம் தந்தையார் மரணப் படுக்கை யிலிருந்த காட்சி, பெருமானாரைத் திடுக்கிடச் செய்தது. தம் ஆருயிரனைய புதல்வரைக் கண்ட சில வினாடிகட் கெல்லாம் தந்தையாரின் உயிர், உலகை விட்டுச் சென்றது. தனையரைக் காணும் பொருட்டேதான் அப்பெரியார் உயிர் உடலை விட்டுப் பிரியாது இருந்தது போலும்! கணவரின் பிரிவாற்றாமையைச் சகிக்க முடியாத பெருமானாரின் அன்னையார் தங்கணவர் இறந்த ஐந்தாம் நாள் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகுக்கேகினார்.

இங்ஙனம், தங்கள் உலகப்பற்றின் காரணமாக இருவரும் உலகை நீத்து மறைந்ததும் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள், தமது மாணாக்கர்கள் புடை சூழ்ந்துவர, மாணிக்கப்பூரை விட்டும், கடைசியாக புறப்பட்டார்கள்.

இங்ஙனம் புறப்பட்ட பெருமானார் பல நாடு நகரங்களை யெல்லாம் சுற்றிக்கொண்டு, பஞ்சாபின் தலைநகர் ஆகிய லாகூர் வந்து சேர்ந்தார்கள். அவ்வூரில்தான் பெருமானார் தமது புதல்வர் சையிது முகம்மது யூசுப் சாகிபவர்கள் பிறந்தது.

முகம்மது யூசுப் ஆண்டவர்கள் இவ்வூரிலுள்ள சைகு நூறுத்தீன் என்னும் பெரியாருக்கும், அவர் தம் மனைவி ஜுஹராபீவிக்கும், ஷஹின் ஷாஹே ஹமீது ஆண்டவர்களின் வரப்பிரசாதத்தினால் உற்பத்தியானார்கள். அதற்கு சரித்திர ஆதாரம் வருமாறு: பெருமானாரின் ஞான தேசிகரவர்கள் முகம்மது கௌது குவாலீர் நாயகமவர்கள் தங்கள் மாணாக்கராகிய ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களை முன்னொருபோது நோக்கி, ''அப்துல்காதிரே! உம்மிலிருந்து ஓர் ஆண் குழந்தை உண்டாக வேண்டியதுண்டு. ''யகுறுஜு மின் பைனி'' என்னும் திருமறை குர் ஆனின் ஆயத்தில் கூறியபடி, அக்குழந்தை வெளியாக வேண்டுமே! அதற்கென் செய்வீர்? நீர் மணவினைக்கு உடம்படாதிருக்கும்போது, எங்ஙனம் அக்குழந்தை வெளிப்படும்!'' என்று வினவினார்கள். அதற்கு ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள், 'எல்லாம் அறியும் ஆற்றல் படைத்த தேவரீருக்குத் தமியேன் யாது சொல்லப் போகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் அக்குழந்தையை வெளிப்படுத்துவான்'' என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஆசிரியரவர்கள் மகிழ்ச்சியடைந்து, ''ஷாகுல் ஹமீதே நீர் விரும்புமிடத்தில் அக்குழந்தையைச் சேர்ப்பியும்'' என்று மறுமொழியளித்தார்கள். அக்குழந்தையே முகம்மது யூசுப் சாகிப்பென்று கூறப்படுகிறது. அதனன்றியும், நீண்ட நாளாய்க் குழந்தைப் பேறின்றி வருந்தியிருந்த காலி

நூறுத்தீன் அவர்கள், 'ஞான தேசிகர்' கூறியபடி, நமது குழந்தையைச் சேர்ப்பிக்கத் தக்க தகுதியானவிடம் இஃதே என்று ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் சிந்தித்துக் களி கூர்ந்தார்கள். உடனே வெற்றிலைப் பாக்குக் கொண்டு வரச் சொல்லி, அதைத் தமது திருவாயில் போட்டு மென்று, அதைக் கக்கி காலி நூறுத்தீன் பெரியாரிடம் கொடுத்து, இதை (பிரசாதத்தை) உமது மனைவியிடம் அளித்து 40 தினம் இறை தவம் இருக்கச் சொன்னார்கள். காலி நூறுத்தீன் கொண்டு வந்து தமது மனைவியிடம் கொடுத்து 40 தினம் இறை தியானம் இருக்குமாறு தூண்டினார்கள். எல்லாம் வல்ல இறைவனின் நல்லருளாம் முகம்மது யூசுப் சாஹிப் பிறந்தார்கள்.

முகம்மது யூசுப் சாகிபு ஆண்டவர்களுக்கு ஏழு வயதானபோது, தகப்பனாராகிய காலி நூறுத்தீன் முன்பு போய்ப் பணித்து நின்று, "என் உண்மையான தகப்பன் யார்?" என்று கேட்டார்கள். அது கேட்ட அவர் பெரிதும் வியப்படைந்து, "அருமைக்கண்ணே! உண்மையாக நான் தான் உனது தகப்பன்" என்று மறுமொழி தந்தார்கள்.

அதைக்கேட்ட சையிது முகம்மது யூசுப்சாகிபு பின்னும் தம் தந்தையாரை விளித்து, "உண்மையே தாங்கள் என் உடலுக்குத்தான் தந்தை, என் உயிருக்குத் தந்தை யார்?" என்று கூறி, மீண்டும் அன்னாரை நோக்கி "எல்லாம் வல்ல எம்பெருமான் மீது சத்தியமாக எனது தந்தையார் சையிது அப்துல் காதிறு இடத்தில் நான் போய்ச் சேர்ந்துக் கொள்வேன்" என்று கூறினார்கள். இம்மாற்றங் கேட்டு, அளப்பரிய ஆச்சரியத்தில் மூழ்கிய காலி நூறுத்தீன் அவர்கள், "என்னரும் புதல்வா, இம்மர்மத்தை உமக்கு அறிவித்தவர் யார்?" என்று வினவினார்களாம். "மறைவுகளை யெல்லாம் அறிந்திருக்கும் அல்லாஹ் இதை எனக்கு அறிவித்தான்" என்று கூறினார்கள். இங்ஙனம் கூறப்படுபவைகளைக் கொண்டு முகம்மது யூசுப் சாகிப் அவர்கள் ஷாஹுல் ஹமீது

ஆண்டவர்களின் வளர்ப்புப் புதல்வராக மட்டும் அமையாது பெருமானாரின் ஞானாசிரியர் கூறியபடி, அவர்களின் சொந்த மகனாகவே கருதப்பட வேண்டியவர்களென்பது கூறாமலே அமையும். இது நிற்க சையிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் லாகூரை விட்டுப் புறப்பட்டு மக்கா, மதீனா, பைத்துல் முகத்தஸ் பென்னானி, அஜ்மீர், பத்தாது ஷெரீப், காயல் பட்டணம், திருச்சி, தஞ்சை, திருவாரூர், கூத்தாநல்லூர் முதலிய பல்வேறு நாடு களையும் சுற்றிக்கொண்டு இறுதியில் தம் தபோதனர்கள் புடைசூழ மேலை நாகூர் என்னும் தலத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

> "கொன்னுறு கறவு வாழுங் குரைகடற் சேரி மேல்பால்
> மன்னுறு மாட கூட மலிதிரு மேலை நாகூர்"

என்ற நாவலர் பெருமான் கூற்றுப்படி, மேலை நாகூர் என்பது இப்போதுள்ள நாகூருக்குச் சற்று மேற்கில் இருக் கின்றது. அஃது அந்த காலத்தில், அழகிய மாட மாளிகை களையும், கூட கோபுரங்களையும் உடையதாயிருந்தது. மேலை நாகூர் மக்கள், ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களை மதிக்கவில்லை. அவர்கள் தம் இனிய சொற்பொழிவு களைப் பொருட் படுத்தவுமில்லை. அது மட்டுமா? அவர்களை கேலி செய்து நகைத்தார்கள். "இந்த மனிதன் யார்? எங்கு உள்ளவர்? அவர் சொல்வது யாது?" என்று பரிகசித்தார்கள், அடிக்கடி நையாண்டிச் செய்தார்கள்.

> "எரியாற் சுடப்பினும் உய்வுண்டா முய்யார்
> பெரியார்ப் பிழைத் தொழுகுவார்"

என்பதை அவர்களறியவில்லை. இன்னல்கள் பல அவர்கள் இழைத்தார்கள்.

ஆண்டவர்கள் மனம் மிகவும் வருந்தி அங்கிருந்துப் புறப்பட்டு, கீழ்ப் புறத்தேயுள்ள கடற்கரை மைதானத்திற்கு

வந்து விட்டார்கள். பெருமானார் அவ்வூரை விட்டுச் சென்ற சின்னாட்களுக்குள் அவ்வூரில் கொள்ளை நோயும், வறுமையும் குடி கொண்டன. நோயும் வறுமையும் ஆற்றாது பலர் ஊரை விட்டு வலசை வாங்கினார்கள். பெரியாரை பழித்த குற்றம் இஃதென உணர்ந்தார்கள். அவ்வூர் முழுதுமே சீரழிந்தது.

மகானவர்கள் மேலை நாகூரை விட்டுவிட்டு வந்து தங்கியிருந்த அக்கடற்கரை மைதானமே இன்று திரை கடல் ஒலிக்கும் தென் நாகூரே விண்ணவர் ஏத்தும் வியன் நாகூராய் விளங்கி நிற்கின்றது. நாகூர் பெருமானார் வந்து தங்கிய அன்று. ஒன்றோடொன்று அடர்ந்து நெருங்கின பல மணல் மேடுகளையும், பெரும்பாலும் புன்னை மரங்களும், நாவல் மரங்களும், பனை மரங்களும், செறிந்த தோப்பு களையும் உடையதாயிருந்தது. இவ்விடத்திற்கு வந்து தங்கியபோது பெருமானாருக்கு வயது ஏறத்தாழ நாற்பது. புதல்வராகிய சையிது முகம்மது யூசுபு சாகிபு அவர்களுக்கு வயது பன்னிரண்டு.

அக்காலத்தில், தஞ்சாவூரை அச்சுதப்ப நாய்க்கன் என்னும் நாய்க்கர் குலத் தோன்றல் அரசாண்டு வந்தான். அம்மன்னன் ஷாஹுல் ஹமீது ஆண்டவரிடம் அளப்பரிய அன்பு பூண்டான் பெரியாரைப் பேணும் இயல்பினன். மேலை நாகூர் அழிந்து விட்ட செய்தி அவ்வரசன் காதுக்கு எட்டியது. இங்ஙனம் அவ்வூர் பாழானதற்குக் காரணம் பெரியாரைப் பழித்த குற்றமே எனத் தெளிந்தான். பின்பு, பெருமானார் இருக்குமிடத்தை விசாரித்தபோது, கடற்கரைக்கருகிலுள்ள தோப்புகளில் தங்கியிருப்பதாக அவனுக்குச் செய்தி கிடைத்தது. அங்ஙனம் செய்தி கிடைத்ததும், அண்ணலைப் பார்க்க ஆவல் மிகக் கொண்டான். உடனே அம்மன்னன் பிரயாணத்திற்கு தயாரானான். ஒரு சிறு பட்டாளம் தன்னுடன் வர தஞ்சையை விட்டுப் புறப்பட்டு மேலை நாகூர் வந்து அடைந்தான்.

பாழ்ப்பட்டிருக்கும் அந்த மேலை நாகூரின் தெருக்கள் வழியே நடந்து சென்று, பெருமானார் தங்கியிருக்கும் இடத்தை அடைந்தான். அண்ணலைக் கண்ட அவ்வன்பு மிக்க அரசன் - அச்சுதப்பன், பணிந்தெழுந்து வணங்கி நின்று, ''பெருமானே! தாங்கள் இங்குத் தங்கியிருப்பதாகக் கேள்வியுற்று, தமியேன் தங்களது திருவடிகளைத் தரிசிக்கப் புறப்பட்டு நாடி வந்தேன்'' என்று அன்பும், பணிவும் தோன்றப் பேசினான். அண்ணலும் அவனை அன்போடு ஆசீர்வதித்து அனுப்பினார்கள். அரசன் அச்சுதப்ப நாய்க்கனால், பெருமானார் தவம் செய்யும் பொருட்டுக் கொஞ்சம் பூமி கொடுக்கப்பட்டது. இப்பூமியிலேதான் ஹஜ்ரத் ஆண்டவர்களின் எழில் மிகு ஆலயமும், தர்காவும் சாகிபுமார்கள் (அதாவது சையிது முகம்மது யூசுபு சாஹிபு ஆண்டவர்களின் பௌத்திரர்களான திருவழித் தோன்றல்) இல்லங்களும் அடங்கியிருக்கின்றன. சையிது முகம்மது யூசுப் சாகிபு ஆண்டவர்களுக்கு ஆண் குழந்தைகள் ஆறு. பெண் குழந்தைகள் இரண்டு. முகம்மது யூசுபு சாகிபு ஆண்டவரின் குடும்பத்தார்களே இன்று ''சாகிபுமார்கள்'' என்று அழைக்கப்படுகின்றார்கள்.

முகம்மது யூசுப் சாகிபவர்களின் மனைவியார் சுல்தான் பீவி என்று கூறப்படுவார். அந்தப் பெருமாட்டியாரின் சகோதரியை ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள், தமது புதல்வருக்கு மணம் பேசிய காலை, குவஜா மகதூம் என்னும் சுல்தான் பீவி அவர்களின் தந்தையார் முகம்மது யூசுப் சாகிபவர்கட்குத் தம் புதல்வியாரை மணம் முடிக்க விரும்பினார்களில்லை. ''அளப்பரிய செல்வத்தின் செழுமையில் வளர்க்கப்பெற்ற என் செல்வி, ஒரு எளிய பகீருடன் எங்ஙனம் வாழ்க்கை நடத்தல் கூடும்? உயர்ந்த ஆடைகளால் தன்னை, அலங்கரித்துக் கொண்டு, அரசபோகத்திருக்கும் என்னருஞ்செல்வி வறுமையிற் சிக்கி வாடும் ஏழையிடத்தில் வாழ்க்கை நடாத்தல் ஒருபோதும் முடியாது. உண்ண உடுக்க வகையற்ற எளிய பகீரின் வளர்ப்புப் பிள்ளைக்குப்

பாக்கியவானாகிய என் மகள் வாழ்க்கைப்படுவது எவ்வாற்றானும் ஏலாதது'' என்று செல்வச் செருக்கும், இறுமாப்பும் தோன்றக் கூறினார். இங்ஙனம் செருக்கால் இறுமாந்து கூறிய குவாஜா மக்துாம் அவர்களே, சில நாட்களில், தம் தவப்புதல்வியைப் பெருமானாரின் சமூகத்திற்கு அழைத்து வந்து, முகம்மது யூசுப் சாகிபவர்கட்கு மணம் செய்து கொள்ளுமாறு வேண்டினார். அதற்கு ஏற்ற காரணம் குவாஜா மக்துாம் அவர்கட்கு எதிர்பாராமல் ஏற்பட்ட எண்ணற்கரிய இன்னலென்று கூறப்படுகின்றது. (விரிவு-குலாம் காதிறு நாவலரவர்கள் இயற்றிய ''கன்ஜுல் கறாமாத்து'' என்ற பூரண சரிதையில் காண்க)

பெருமகான் ஷாஹுல் ஹமீது காதிறு வலி நாயகர் இந்த மண்ணுலக வாழ்க்கையை நீத்தது, ஹிஜ்ரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்து எட்டாம் ஆண்டு ஜமாத்துல் ஆகிறு மாதம், பத்தாம் நாள், வெள்ளிக்கிழமை வைகறை பொழுது விண்ணுலகம் எய்தினார்கள். அப்பெருமானார் இறக்கும் பொழுது அவர்கட்கு வயது அறுபத்தெட்டு.

பெருமானாரின் இறப்பு தபோதனர்களாகிய நானூற்று நான்கு பகீர்களுக்கும், புதல்வர் சையிது முகம்மது யூசுப் சாகிபவர்களுக்கும், அவர் தம் மனைவி, மக்களுக்கும் ஆற்றொணாத் துயரைத் தந்தது. இன்னது செய்ய வேண்டு மென்பதை அறியாது நிலை கலங்கினர். பெருமானார் எல்லாம் வல்ல இறைவனடி நிழலை எய்திய பின்னர், அந்த நானூற்று நான்கு தபோதனர்களும் எவ்வித வேலையு மின்றி ஒரே இடத்தில் இருக்க விரும்பினார்களில்லை. பல்வேறு நாடுகளையும் சுற்றி வர எண்ணி, தங்கள் விருப்பத்தைத் தங்களது அப்போதைய தலைவராகிய முகம்மது யூசுப் சாகிபவர்களிடம் தெரிவித்தார்கள். அவர்கள் முதலில் அந்தப் பகீர்களை விட்டுப் பிரிய விரும்பவில்லை யாயினும், அவர்கள் கூறுவது நியாயமாயிருத்தல் பற்றி ஒருவாறு உடன்பட்டார்கள். ஆனால், ஒவ்வொரு ஆண்டும் எங்கிருப்பினும், பெருமானாரின் ''வருஷபாத்திஹா''வுக்கு

இங்கு வந்தடையுமாறு கட்டளையிட்டு அனுப்பினார்கள். அந்தத் தபோதனர்களும் அதற்கிணங்கி அங்கிருந்தும் வெளிநாடு செல்வான் விழைந்து வெளிச் சென்றனர்.

தபோதனர்கள் சென்ற பின்னர், தன்னந்தனியராய் தமது மக்களோடு குடித்தனம் நடத்திக் கொண்டிருந்த பெருமானார் முகம்மது யூசுப் சாகிபவர்களுக்கு, பட்டினச்சேரி பரதர்களே உற்ற துணைவராய் ஊழியஞ் செய்து வந்தனர். அன்றியும், சுற்றூர் வாசிகளும் அப்போதைக்கப்போது வந்து பெருமானாரை தரிசனம் செய்து கொண்டு போயினர். இதற்கிடையில், பட்டினச்சேரி பரதர்கள் -(அதாவது மீன் பிடிக்கும் தொழிலாளி) ஷுஹின் ஷாஹே ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களிடத்தில் கொண்ட அன்பு மேலீட்டால், அப்பெருமானாரின் "கபுறை" சமாதியைச் சுற்றிப் பலகையால் பள்ளி போல் அடைத்தார்கள். மரப்பலகையால், பட்டினச்சேரி பரதர்களால் அன்று கட்டப்பட்ட அச்சிறு பள்ளியே இன்று அழகிய ஐந்து கோபுரங்களை (மினாரா) உடையதாய் பலவகைச் சிறப்போடும் மிளிர்கின்றது என்னே! அம்மகானின் அற்புத சக்தி!

முகம்மது யூசுப் சாகிபு ஆண்டவர்கள் இவ்வாறு தம் மனைவி, மக்களோடு வாழ்ந்து வருங்காலை, தம் தந்தையார் அவர்களின் திவ்வியாலயப் பணியை நாடோறும் செய்து வருவராயினர். இங்ஙனம் இருக்கும்போது ஜாமத்துல் ஆகிறு மாதம் அடுத்தது. ஆண்டவர்கள் விண்ணகர்க்கேகிய அந்நாள் வரவே, முகம்மது யூசுப் சாகிபவர்கள் "வருஷகந்தூரி" திருவிழா நடத்துவதற்கு ஆயத்தமானார்கள். பரதேஞ் சுற்றப் போயிருக்கும் தபோதனர்கள் வருவார்கள் என்கிற நம்பிக்கையும் அவர்கட்கு இருந்தது. எனவே, ஜமாத்துல் அவ்வல் மாத இறுதியிலேயே அதற்கு ஆவண எல்லாம் தயாரித்தார்கள். இங்ஙனம் "ஆண்டுத் திருவிழா"வுக்கு ஆவண அனைத்தும் தயார் பண்ணிய பெருமானார் ஜமாத்துல் ஆகிறு மாதப் பிறையையும், அத்தபோதனர்கள்

வருகையையும் எதிர்பார்த்திருந்தனர். அன்னார் எதிர்பார்த்த வண்ணமே, கந்தூரி பிறை காணும் அன்று அந்நானூற்று நான்கு தபோதனர்களும், கூட்டங் கூட்டமாய் வந்து சேர்ந்தனர். இவர்கள் இவ்வாறே அன்று தொட்டு, இன்று வரையிலுள்ள ஒவ்வோராண்டும் வந்து செல்லுகின்றனர்.

(இத்தபோதனர்கள், பிறகு நான்கு வகுப்பாய் பிரிந்து கொண்டனர். அவ்வகுப்புகளில், முந்திய வகுப்பார் தங்களை ''பான்வா'' என்றும், இரண்டாம் வகுப்பார் தங்களை ''மலங்கு'' என்றும், மூன்றாம் வகுப்பார் தங்களை ''மதாரி'' என்றும், நான்காம் வகுப்பார் தங்களை ''ஜலாலி'' என்றும் பிரித்துக் கொண்டனர்.) (விரிவு-''கன்ஜுல் கறாமத்''தில் காண்க).

பின்னர், அந்தத் தபோதனர்கள் குழாங்களோடு முகம்மது யூசுப் சாஹிப் பெருமான், ''ஆண்டுத் திருவிழா''வைச் சிறப்போடு நடாத்தினர். தலைமாட்டுக்கு மேற்புறம் ஒரு பெரிய மூங்கிலை, ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் ஆண்டவனடி சேர்ந்த மாதமென்றும், அடையாளச் சின்ன மாகக் கொடியேற்றுவதற்கு நாட்டினார்கள். அங்ஙனம் அம் மூங்கிற்கழியில் அன்று ஏற்றுவிக்கப்பட்ட அக்கொடி யேற்றுத் திருவிழாவே, இன்று மிக்கச் சீரும் சிறப்புமுற்று, விண்ணவர் கண்டேத்தும் வண்ணம், ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது.

அந்தத் தபோதனர்களாலும், முகம்மது யூசுப் சாகிப் அவர்களாலும் கொடியேற்றுத் திருவிழா நடைபெற்ற மறுநாள் நாகப்பட்டணத்து முஸ்லிம் கனவான்களுள் ஒரு சிலர், முகம்மது யூசுப் சாகிபவர்களிடம் வந்து, ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் உபாத்தான இந்தத் திங்கள் 10-ம் நாள் இரவு, கூடொன்று செய்வித்து, சந்தனக் குழம்பு அரைத்த பாத்திரமொன்றை அதனுள் வைத்து, அதனை ஊர் சுற்றி வந்து, பெருமானாரின் சிறப்பான கப்றின் (சமாதி) பேரில் பூச வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

தேவரீர் தமியேங்கள் கொண்ட சிந்தை மற்றதனைக் கேட்பீரோ,

“வறுநுந்தை யொன்று மூலகிறந் தகன்ற
பத்தாந்தா வழி தினத்தினன்கு
தருமிர வன்று தக்கபாவனை யொன்று
செய்வான் பண்போடு விழைந்துளேமால்”

என்று புலவர் பெருந்தகை குலாம் காதிறு நாவலரவர்கள் கூறியபடி, அந்த நாகப்பட்டணத்து கனவான்கள் கேட்டுக் கொண்டதை முகம்மது யூசுப் சாகிப் பெருமான் உடனே ஏற்றுக் கொண்டார்கள். இங்ஙனம் நாகை கனவான்களால், முதன் முதல், பெருமானார் இறந்த ஜமாத்துல் ஆகிறு மாதம் 10-ம் நாள் இரவு கத்தத்தின்போது, துவக்கப் பெற்ற அந்தக் கூடெடுக்கும் விழாவே இன்று இத்துணை மேன்மையுற்று விளங்குகிறது.

பின்னர், நாளடைவில் இதனைக் கேள்வியுற்ற மக்கள் பலர் கூட்டங் கூட்டமாய் வந்து, அடர்ந்தோங்கி வளர்ந் திருக்கும் மரங்களை வெட்டி, மணல் மேடுகளை யெல்லாம் சம தரையாக்கி, வீடுகள் கட்டிக் கொண்டு குடியேறினார்கள். இவ்வாறாகவே, முதலில் ஒரு சிற்றூராய், 'நாகூர்' என்று பெயர் வழங்கத் தொடங்கிற்று. இவ்விடம் முதலில் பல மரங்களை உடையதாயிருந்தாலும், புன்னை மரங்களே மிகுதியும் இருந்தது பற்றி, புன்னை மரத்தின் பெயராகிய நாகம் என்பதை அடுத்து நாகப்பூர் என்று பெயர் பெற்று, பின்பு அது நாகூர் என்று மருவி வழங்குவதாய் கூறப்படுகின்றது.

அன்றியும், கந்தூரி 10-ம் நாள் இரவு கத்தத்தின் போது, சந்தனம் பூசும் உரிமையுடையவர்கள், சந்தனக் குடத்தை தலையின் மேற் சுமந்து செல்லும் காட்சியை (வைகறைப் பொழுது) ஒரு மனிதன் அங்கு நின்று பார்த்துக் கொண்டு இருப்பானாயின், அவன் எத்தகைய

நம்பிக்கையற்றவனாயிருப்பினும், அவன் உள்ளம் பக்திப் பெருக்கால் நெக்கு நெக்கு உருகாதிருத்தல் முடியா தென்பது எளியேனின் நம்பிக்கை. ஏதோ ஒரு சக்தி அவனைக் கல்லாய் சமைத்து விடுமாறு செய்வதை அவன் உணர்வான். அத்தகைய மாபெரும் சக்தி ஒன்று, அங்கு ஆட்டி வைப்பதை அவன் உணராமலிருத்தல் முடியாது. பெருமானாரின் மகத்துவத்தை அளவிட, நாகூரே ஒரு அளவுகோலாய் அமைந்து கிடைக்கின்றது. மணல் மேடுகளும், அடர்ந்து நெருங்கின மரங்களும் உடையனவாயிருந்த இந்த இடம், இத்துணைச் சிறப் பெய்தியதற்கு ஏற்ற காரணம் பெருமானார் அவர்களின் மகிமையேயன்றி, வேறு என்னவாகத்தான் இருத்தல் கூடும்.

தர்காவின் சில தோற்றம்

முதுபக்கு (காட்சி - 1)

இது, சக்கரவர்த்தி சுல்தான் துல்கர்னைன் அவர்களால் கட்டப்பட்டது. இதில் தான், ஆண்டவர்கள் தங்கியிருந்த புண்ணிய ஸ்தலம். இந்த ஸ்தலத்தில்தான் ஆண்டவர்கள் மரணமெய்தினார்கள். ஞான வாழ்க்கை நடத்தினார்கள்; அதுபோல், திருக்குமாரர் சையத் முகம்மது யூசுப் சாகிபு ஆண்டகையவர்களும் வாழ்க்கை நடத்தினார்கள்; மரணம் எய்தினார்கள். ஸ்தலத்தில் ஒரு அற்புத கேணி உண்டு. அதன் தண்ணீரை, ''புண்ணிய தீர்த்தம்'' என்று கூறுகின்றார்கள். மக்கள் அதைச் சீசாவில் அடைத்து, வெளியூர்களுக்கும் எடுத்துச் செல்லுகின்றனர். இந்தப் புண்ணிய தீர்த்தத்தை, அருந்தினால், தீராத வியாதிகள் அனைத்தும் நிவர்த்திக்கப் படுகிறது. இக்கேணியிலே, அமரர் கிலிறு (அலை) அவர்களும், ஷாஹுல் ஹமீது ஆண்டவர்களும், மற்றும் வான அமரர்களும் ஒலுவு (அதாவது தொழுகைக்காக ஒலுவு) செய்தும் இருக்கின்றார்கள். இதன் மாண்பால்தான் அக்கேணிக்கு இவ்வளவு மகத்துவமும், அந்த முதுபக்கு என்ற மண்டபம், தர்காவில் வடகிழக்கு மூலையில் காட்சி தருகிறது.

யாஹுசைன் பள்ளி (காட்சி - 2)

இது, ஆண்டவர்களின் புனித உடல், மரணமெய்திய வுடன் இவ்விடத்திலே வைத்துக் குளிப்பாட்டினார்கள். (அதாவது மதக் கட்டளைப்படி மரணச் சடங்கு) செய்த

புனித ஸ்தலம். இவ்விடம் முதுபக்குக்கு வெளியில் தென் புறத்தில் இருக்கின்றது. இதை மக்கள் திரண்டு கண்டு வருகின்றார்கள்.

தர்கா குளம் (காட்சி - 3)

இது ஆண்டவர்களின் புனித உடலினைக் குளிப்பாட்டிய அவ்வற்புதத் தண்ணீர் கீழ்புறமாக வழிந்தோடி ஒரு பள்ளத்தில் நின்றது. அந்தப் பள்ளம் வெகுகாலம் குட்டை (சிறிய குளம்) போன்றிருந்து, நாளடைவில் அதன் பின் அச்சை சுல்தான் அவர்களால் அதைப் பெருங்குளமாக வெட்டி, மக்களுக்கு வசதியை ஏற்படுத்தி வைத்தார். இந்தக் குளத்துத் தண்ணீரையும், புண்ணிய தீர்த்தம் என்று மக்கள் கருதுகின்றார்கள். ஹிந்து சகோதரர்கள், முடியிறக்கிவிட்டு, இந்தக் குளத்தில் குளிப்பது வழக்கம்.

பீர் மண்டபம் (காட்சி - 4)

இது தர்காவில் இருக்கிறது. இதில் வருடா வருடம், திருவிழாக் காலங்களில், (அதாவது - ஜமாத்துல் ஆகிர் 9-ம் இரவு அன்று) பீர் சாயபு என்ற தபோதனர்கள், குரு நோற்ற நோன்பு நோற்று, ஊன் தீனற்று, 3 நாள் உபவாசம் இருப்பார். 11-ம் நாள் மாலை 5 மணிக்கு, பீர் சாயபு கடற்கரை சில்லடி (ஆண்டவர்கள் திருமுடியிறக்கிய புனித ஸ்தலம்) போய், ஒலுவு செய்து, நோன்பு திறந்து விட்டு, அங்கிருந்து புறப்பட்டு, பீர் மண்டபத்தில் வந்து அமருவார்.

சில்லடி (காட்சி - 5)

இது ஆண்டவர்கள் திருமுடியிறக்கிக் கொண்டிருக்கும் போது, (அதாவது கடற்கரையோரத்தில்) கம்பம் என்ற ஊருக்குப் போகும் கப்பல், கடும் புயலில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, ஆண்டவர்கள் முகம் பார்க்கும் கண்ணாடியில் கப்பல் அவதிப்படுவது தெரிந்தது.

உடனே கண்ணாடியைக் கடலில் வீசி எறிந்தார்கள். கப்பல் துவாரத்தின் வழியே தண்ணீர் உட்சென்று முழுக இருந்த கப்பலின் துவாரத்தை, அந்தக் கண்ணாடியினால் அடைத்து விட்டார்கள் ஆண்டவர்கள். இந்தச் செய்தியைக் கப்பல் அதிகாரிகள் அறிந்து ஆண்டவர்களுக்குத் திரண்ட காணிக்கை களை அனுப்பி வைத்தார்கள். அந்தத் திருமுடியிறக்கிய கடற்கரை ஓரம்தான் இன்று "சில்லடி" என்ற ஆலயம் இருந்து வருகிறது. ஆண்டுக்கு ஒருமுறை திருவிழாவும் நடந்து வருகிறது.

வாஞ்சூர் பள்ளிவாசல் (காட்சி - 6)

இது, ஆண்டவர்கள் "கல்வத்து" என்ற இஸ்லாமிய இறை தியானத்தில் 40 நாள் இருந்த புண்ணிய ஸ்தலம். இந்த இடம் நாகூருக்குச் சற்றே (2 ½ மைல்) தூரத்தில் இருக்கின்றது. வருடா வருடம் திருவிழாவும் நடந்து விளங்குகின்றது. பிரார்த்தனைக்காகத் திரள் திரளாக ஜனங்கள் அங்கே போகின்றார்கள். அதன் பரிபாலனம் நாகூர் தர்காவின் ஆதினத்திலிருந்தே வருகிறது.

நாகூர் சென்று பாருங்கள்!

கோபுரம் (மினாரா) வரலாறு சுருக்கம்

(1)

முதலாம் மினாரா ஸ்தாபித்த வரலாறு ஆரம்பமாகிறது: செஞ்சி மாநகரில் பிரபல வர்த்தகரும், அதிகாரியுமான இப்ராஹீம் கான் என்று ஒருவரிருந்தார். அவர் கோரிய வரத்தை ஆண்டவர்கள் நிறைவேற்றி வைத்தார்கள். அதற்காக வேண்டியே, ஹிஜ்ரி ஆயிரத்து ஐம்பத்தைந்தாம் வருடம் இம்மினாரா கட்டப்பட்டன. இம்மினாரா தெற்கு புறமாக காட்சியளிக்கின்றது. சாகிபு மினாராவென்று நாமம் பெற்று விளங்குகிறது.

(2)

இரண்டாம் மினாரா ஸ்தாபித்த வரலாறு: நாகையில் வாழும் கப்பல் வர்த்தகர் நல்ல செய்யது மரைக்காயர் என்பவர் சில காலமாக பெரும் கஷ்ட நிலைமை யிலிருந்தார். நாகூர் ஆண்டவரை நாடி வந்த தருணத்தில், அவர்கள் கஷ்ட நிலைமைகள் நிவர்த்திக்கப்பட்டது. அதற்காக ஹிஜ்ரி ஆயிரத்து நூறாம் வருடம் ஸ்தாபிக்கப் பட்டது. இம்மினாரா ஆண்டவர்களின் தலைமாட்டு பக்கமிருப்பதால் ''தலைமாட்டு மினாரா''வென்று நாமம் விளங்குகின்றது. இம்மினாராவிற்கு தற்சமயம் கூத்தாநல்லூர் ஓர் ஹிந்து தனவந்தரால் சின்ன தங்க கலசம் வைக்கப் பட்டிருக்கிறது. மெர்குரிக் லைட்டும் உண்டு.

(3)

மூன்றாம் மினாரா ஸ்தாபித்த வரலாறு: இரண்டாம் மினாராவைக் கட்டுவித்த கப்பல் வர்த்தகர் நல்ல செய்யது மரைக்காயர், மலாக்கா சென்றிருந்தார். அவ்விடம் தன் ஆத்ம நண்பர் மரைக்காயரை சந்தித்தார். வர்த்தக சம்பந்தமாக பேசிக் கொண்டிருக்கும்போது, அவருடைய இன்னல்களை எடுத்துரைத்தார். தாங்கள் ஆண்டவர்கள் மீது பிரார்த்தனை செய்து கொண்டால், உங்கள் கஷ்டங்கள் நிவர்த்திக்கப்படுமென்று கூறி விட்டு வந்து விட்டார். அவர் சந்தித்த சில மாதங்களுக்குப் பின்பு மலாக்காவிலுள்ள வர்த்தகர் பீர் நெய்னா என்பவரின் பிரார்த்தனை நிறைவேற்றப் பெற்று, ஹிஜ்ரி ஆயிரத்து நூற்றுப் பத்தாம் வருடம் பீர் நெய்னா என்பவர்களால் கட்டப்பட்டது. இம்மினாரா கிழக்கு திசையிலுள்ளது. ''முதுபக்கு மினாரா''வென்று அழைக்கிறார்கள்.

(4)

நான்காம் மினாரா வரலாறு: பறங்கிப்பேட்டையில் நீதிபதியாகிய தாவுக்கான் என்பவர் ஆண்டவர்களின் கந்தூரி (திருவிழா)விற்கு நாகூருக்கு விஜயம் செய்திருந்தார். தர்காவைச் சுற்றிப் பார்க்கும்போது, 3 மினாராக்கள் தென் பட்டன. அவர் நான்கு திசைக்கும் மினாராயிருப்பின், அலங்காரமாக இருக்குமென்று நினைத்து என் கோரிக்கையை ஆண்டவர்கள் நிறைவேற்றினால், நாம் நான்காம் மினாராவை கட்டி வைக்கலாமென்று, ஆண்டவரிடம் பிரார்த்தனை செய்துக்கொண்டு சென்று விட்டார். அவருடைய பிரார்த்தனை பலித்து, அதன்படி நான்காம் மினாரா கட்டப்பட்டது. இம்மினாரா தென்புறம் திசையிலுள்ளது. ஓட்டு மினாரா வென்று நாமம் விளங்கிற்று. (கீழ்த்தளத்தில் நான்கு புறமும், ஓட்டுச் சாய்ப்பான மேல்கூரை இருந்தபடியால், இதற்கு ஓட்டு மினாராவென்று நாமமிடப்பட்டது). சில

வருடங்களுக்கு முன்தான் அதன் மேல் கூரை தகர்ந்து விழுந்தது. இன்று நல்லதோர் சின்னமாகக் காட்சி யளிக்கின்றது.

மன்னர் அளித்த காணிக்கை

(5)

ஹஜ்ரத் சுல்தான் ஷாஹுல் ஹமீது பாதுஷா ஆண்டவர் களின் அற்புதங்கள் அதிகரித்து, காலத்திற்கு காலம் திசை யெங்குச்சென்று விளங்கின. அவர்களின் திவ்யாலயமாகிய தர்கா மினாராக்கள் என்கிற கோபுரங்களையும் நான்கு பக்கமுள்ளதாய், அலங்காரமான ஒரு சித்திரப் படம் போன்று, விளங்கிக் கொண்டிருந்தது. ஆலய தரிசனம் என்கிற தர்கா ஜியாரத் நாடி அனேக நாடுகளிலிருந்தும், பிரதி தினமும் வந்து கொண்டே இருந்தார்கள். நாகூர் வர வர அகன்று பட்டணமாய் கொண்டு வந்தது. ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது ஆண்டகையவர்களுக்கு ஹவேலி நிலங் கொடுத்த அச்சுதப்ப நாய்க்கன் என்னும் அரச வமிசத்தில் ஆளப்பட்டு வந்த் தஞ்சாவூர் நாய்க்கன்மார் ஆளுகையிலிருந்து மகாராட்டிரர் ஆளுகையில் ஆய்விட்டது. இக்காலத்தில் தஞ்சைக்கு அரசனாய் பிரதாபசிங்கு என்னும் மன்னர் ஆண்டு வந்தான். பிரதாபசிங்கு மகாராஜா பட்டத்திற்கு வந்த பின் ஆண்டவர்களின் மகிமை நாள்தோறும் அவன் செவியில் ஏறி கொண்டிருந்தது. அவன் ஆண்டவர்களின் பூர்வ வரலாறு முதலியவற்றை விசாரித்து, அறிந்து கொண்டு, நாம் ஒரு தரம் நாகூர் போய் வரவேண்டும் என்று எண்ணியிருந்தான். இவ்வெண்ணம் பல நாளாக மனதில் குடியாயிருந்தபடியால், நாம் நாகூர் போய் ஆண்டவர்களிடம் ஒரு நாட்டத்தை முறையிட்டு வர வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தம் பண்ணும்படி மந்திரிக்கு அறிக்கை பண்ணினான். பின்பு பிரயாணம் ஆரம்பமாகி விட்டது. பிரதாபசிங்கு தன்

படை பரிவாரங்களுடன் நாகூர் வந்தடைந்தான். ஹஜரத் ஆண்டவர்களின் மகத்துவமுள்ள தர்காவுக்குள் பிரதாபசிங்கு நுழையுமுன்னே, தான் அணிந்திருந்த பாதகோசங்களைக் கழற்றி விட்டு, இடையில் தொங்கிய பட்டத்து வாளையும் எடுத்து, முன் வாசலில் வந்து கிரீடமிலங்கும் தலையைக் குனிந்து கைகட்டி ஒரு அடிமை போல் நின்று, கீழ்வருமாறு பிரார்த்தித்தான்:- ''எங்கள் எளிய இராஜ்யத்திற்கு எஜமானனாய் எழுந்தருளி வந்த ஆண்டவர்களே! தங்கள் அடியேனாகிய நான் உலகாளும் அரசனாயிருந்தும் ஒரு பெரும் கவலையால் மனப் பாக்கியமற்றவனாயிருக் கிறேன். அந்த கவலையானது எனக்குப் பின் என் அரசை ஆளுதற்கு ஒரு சந்ததி இல்லையே என்பதுதான் என்று தாங்கள் அறிவீர்கள். இனி என் ராஜ்யத்தை சுமந்து ஆள எனக்கு ஒரு மகன் பிறக்க வேண்டும். இக்குறை தீர வேண்டுமென்றே தங்கள் சந்நிதானத்தில் முறைபாடு செய்கின்றேன். எனக்கு ஒரு மகன் பிறந்து ஆயுள் உள்ள பிள்ளையாக இருப்பானாகில், மகத்துவமுள்ள தங்களின் திவ்விய ஆலயத்தில் ஒரு மினாரா என்னும் கோபுரம் கட்டி ஒரு கிராமமும் தங்களுக்கு தத்தம் செய்கின்றேன்'' என்பதே. பிரதாபசிங்கு இவ்வாறு பிரார்த்தனை செய்து கொண்டு மறுநாள் புறப்பட்டு தஞ்சைக்குப் போய்ச் சேர்ந்தான்.

பிரதாபசிங்கு பிரார்த்தனைப் பண்ணிக் கொண்டு தஞ்சைக்குப் போய்ச் சேர்ந்த சில தினங்களில், அவன் முதல் மனைவி ராணி கருப்பமானாள். தன் ராணி கருப்பமா யிருப்பதை அறிந்த மன்னர் மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தான். மாதம் ஒன்பது சென்று அவள் ஒரு ஆண் குழந்தையை ஈன்றாள். தன் கோரிக்கைப்படி ஆண் பிள்ளை பிறந்ததனால் மன்னருக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. பின்பு, பிரதாபசிங்கு தன் மகனுக்குத் **துளசி மகாராஜ்** என்று நாமமிட்டான். ஆண்டவர்களின் வரத்தினால் பிறந்த அக்குழந்தை யாதொரு தீங்குமின்றி வளர்பிறை போல வளர்வதை அரசன் கண்டு பூரித்து, சில அதிகாரிகளை

நாகூருக்கு அனுப்பி, மினாரா கட்டும்படி கட்டளை யிட்டான். கட்டளைப் பிறந்தவுடன் அரசரின் அதிகாரிகள் தஞ்சையிலிருந்து நாகூருக்கு வந்து, சாகிபுமார்களின் அனுமதி பெற்று மினாரா கட்டத் தொடங்கினார்கள். ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது ஆண்டகையவர்கள் அடங்கி விளங்கும் சிறப்பான தர்காவுக்கு மேல் புறமிருந்த நிலத்தில் அஸ்திவாரமிட்டு, விரைவில் கட்டிட வேலை நடந்து வந்தது. மன்னர் கட்டளையாதலால், வேலை அதிக சுறுசுறுப்பாய் நடந்தது. ஆயிரக்கணக்கான ஆட்கள் நின்று வேலை செய்தார்கள். ஆயினும் கட்டி முடியச் சில வருடங்கள் சென்றன. ஹிஜ்ரி ஆயிரத்து நூற்றெழுபத்தேழாம் வருடம் (ஆண்டவர்கள் மரண மெய்திய நூற்றுத் தொண்ணிற்றொன்பதாம் வருடம்) ஐந்தாம் மினாராக் கட்டி முடிந்தது. நான்கு மினாராக்களிலும் இது பெரியதாய் இருப்பதால் இதைப் ''பெரிய மினாரா''வென்று அழைக்கிறார்கள்.

"பெரிய மினாரா"
அலங்கார அமைப்பு வருணனை

பெரிய மினாரா 9 தட்டுகளாலான ஒரு அழகிய கட்டிடம். அதன் ஒவ்வொரு தட்டும் 4 வாயில்களை யடைந்திருக்கிறது; தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு ஆகிய நான்கு திசைகளிலும் சுமார் 4 அடி உயரத்திற்கு அமைந்து இருக்கும் அவ்வாயில்கள் மிகவும் ரம்மியம் தருகின்றன. மாடப் புறாக்களும் வண்ணப் புறாக்களும் தங்குவதற்காக அனேக மாடங்கள் அமைக்கப் பட்டிருக் கின்றன. அதன் ஒவ்வொரு தட்டும், அதற்கு மேலுள்ள தட்டைவிட அகலத்திலும், நீளத்திலும், உயரத்திலும் சற்று விஸ்தீரணமாய் இருக்கும். மெதுவாக சிறுத்து குறுகி உயரும் போற்றத்தக்க அமைப்பு, அதைக் கட்டி முடித்த கலைஞர்களின் கலைத்திறனைப் பறை சாற்றுகிறது. ஒரு எள்ளளவும் மாறாமல் நகராமல் திறம்பட அமைந்த அம்மினாரா இந்தியாவின் புகழையும், அதன் முற்கால கலா ரசிகர்களையும் போற்றுவதை ஞாபக மூட்டுகிறது. ஒவ்வொருவரும் அவரவர் தொழிலில் வல்லுனர் என்பதை யாரும் அறிவர். சாஸ்திரத்திலும், கணிதத்திலும், சரித்திரத்திலும், சிற்பக் கலையிலும் இந்தியா ஒரு காலத்தில் சிறந்து விளங்கிய விஷயமும் அம்பலமானதே. அவர்களாலியற்றப்பட்ட சின்னங்கள் எடுத்தோதுகின்றன. தவிர அந்தக் கால மன்னர்கள் ரசிகர்களாயிருந்தனர். கலையைக் கொண்டாடினர், கலைஞர்களை சிறப்பித்தனர்.

நாகூரின் திருவிழா (கந்தூரி) விசேஷ தினங்களில் அம்மினாரா தனி அழகு பெறும். வானிலே சிறகடித்துப்

பறக்கும் பட்டுக்கொடியும், அதன் ஒளி வீசும் தங்க கலசமும், அதன் நாலாபுறமும் பறந்து திரியும் புறாக்களும் அதன் அழகுக்கு திலகமிடுகின்றன. அம்மினாராவில் மேல் தட்டிலிருந்து எழும்பி, ஒரு பாய்மரம் கலசத்திற்கு சற்று மேல் உயரம் அதையும் மற்றொரு பாய் மரத்துடன் இணைக்கப்பட்டு கம்பீரமாகத் தோன்றும். அதில் அலங்கார மாகக் கொடியும் 'பாவட்டான்' என்ற நீண்ட கொடியும் சிதறி பறக்கும். அதற்கு ஏற்றப்படும் கொடி பற்பல நாடுகளிலிருந்து அன்பளிப்பாக அனுப்பப்படுகிறது. சுமார் 100 அடி உயரமுடைய அம்மினாராவின் கட்டிட அமைப்பு அபாரமானது. முற்கால கொத்தர்கள் தம் திறமைக்கு எடுத்துக்காட்டாக அமைத்து விட்டார்கள். நாகூர் தர்காவில் பெரிய மினாராவைப் போன்று இன்னும் 4 மினாராக்கள் உண்டு. அவைகள் அத்தனையும் பெரிய மினாராவை விட சிறியதேயாகும். அழகிலும் சரி - குறைந்ததே.

தர்காவின் மேற்கு எல்லையில் பெரிய மினாரா அமைந்திருக்கிறது. நாகூரின் அழகிய அமைப்புக்கு அது ஒரு திலகமட்டுமல்ல, திலகத்திலும் உயர் திலகமாகும். பெரிய மினாராவிற்கு ஏற்றப்படும் கொடியைப்போல் அத்தனை மினாராவுக்கும் ஏற்றப்படும் திருவிழாக் காலங்களில் மின்சார அலங்காரங்கள் ஜோடிப்பு அதிகமாக இருக்கும். கந்தூரி முடிவுற்றதும் மினாராக்களெல்லாம் கொடி இழந்து, பாய்மரம் துறந்து, மின்சாரமற்று வெறிச்சோடி காணப்படும் காட்சி பரிதாபமாக இருக்கும். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட புயலால் தஞ்சை ஜில்லாவே அலங்கோலப்பட்டது. அசைக்க முடியாத மரங்களும், உறுதியான மாளிகைகளும், காற்றில் பறந்தன. ரயில் இருப்புப் பாதைகளும், தந்தி, மின்சார பாதைகளும் வளைக்கவும், ஒடிக்கவும் பட்டன. தொடர்ந்து சில மணிகள் வரை வீசிய புயலால் நாகூர்வாசிகள் தர்காவை வந்தடைந்தனர். முதலில் ஏதோ ஒரு திக்கில் வீசிய காற்று கிழக்கு, மேற்கு திரும்பியதால் கடல் ஊரில் புகுந்ததே

காரணம். இந்த சமயத்தில்தான் பெரிய மினாராவின் தங்க கலசம் கழன்று விழுந்தது. ஆனால் மினாராவிற்கு யாதொரு விபத்தும் ஏற்படவில்லை. புயலுக்குப்பின் அக்கலசத்தை ஒருவாறு செவ்வைப்படுத்தி வைத்தார்கள் என்றாலும் அழகில்லாதிருந்தது. 1956-ம் வருடம் ஜுன் மாதம் 2-ம் தேதி ஒரு முஸ்லிம் தனவந்தரால் ரூ.15,000 செலவில் புதுப்பித்து வைக்கப்பட்டிருக்கிறது. அக்கலசம் சுமார் 6 அடி உயரமிருக்கலாம். அழகாக தங்க பட்டையடித்து தங்கபஸ்பத்தைப் பூசியிருக்கிறார்கள். தங்க கலசம் மீது ''மெர்குரிக்'' நீல விளக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. எதிர் சூரிய ஜோதியின் வெயிலில் மின்னுகிறது.

தர்காவின் நிகழ்ச்சி நிரல்

ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது பாதுஷா ஆண்டவர்களின் சன்னதி (றவ்வுலா) 7 வாயில்கள் கொண்டது. வெள்ளி வாயில் கதவுகளால் அழகுபட அமைந்துள்ளது. சன்னதி உள்ளே சங்குக்கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பிரதி தினமும் காலை மணி 4.30-க்கு ஆண்டகையவர்களின் திருரவ்லா (சன்னதி) திறக்கப்படும். திறக்கப்படும்போது மரியாதை குண்டுகள் முழங்கும். மீண்டும் மாலை மணி 6.30-க்குத் திறக்கப்படும். இரவு மணி 10-க்கு மூடிவிடப்படும். காலையில் எக்காரணம் கொண்டும் திறக்கப்பட மாட்டாது. ஆனால் வெள்ளிக்கிழமை அன்று முஸ்லிம்களின் ஜும்ஆ தொழுகைக்காக மணி 12-க்குக் கதவு திறந்து மணி 2-க்கு அடைக்கப்படும். மூன்று சமாதிகள் உள்ளன. ஒன்று, நாகூர் ஆண்டவர்களின் சமாதி, மற்றொன்று அவர்கள் குமாரர் ஹஜ்ரத் சையத் முகம்மது யூசுபு ஒலியுல்லா ஆரிப்பு நாயகர் சமாதி. மற்றொன்று, இவர்களின் மனைவியார் செய்யிதா சுல்தான் பீவி அம்மாள் நாயகம் ஆகிய மூன்று சமாதிகள் மிளிர்கின்றன.

வியாழக்கிழமை

வியாழக்கிழமை தினம் ஒரே ஜனத் திரளாக இருக்கும். வெளியூர்களிலிருந்தும், இம்மஹானின் விசுவாச நேயர்கள் திரண்ட வண்ணமாக இருப்பார்கள், காண்பவர்கள் பக்தி பெருக்கால் உருகி விடுவார்கள். காலையிலும் மாலையிலும் ஹிந்து சகோதரர்கள் முடியிறக்கும் காட்சி; ஜாதி சமய பேதமின்றி நாம் எல்லோரும் சகோதரர்கள் என்ற மனப்பான்மையை கண்முன் காட்சி கொடுக்கும் அரிய காட்சியை உலகம் உணர வேண்டிய முக்கிய கட்டம். அன்று பூராவும் ஒரே ஜன சமுத்திரமாக-பக்தி பெருக்கால் மக்கள் திரண்டு வந்து தரிசனம் (ஜியாரத்) செய்து கொண்டு செல்வார்கள். வெள்ளி இரவு மட்டும் மணி 11.30-க்குச் சன்னதி மூடப்படும்.

திருவிழா (கந்தூரி) நிகழ்ச்சி

(ஆரம்பம் முடிவு)

அரபி மாதம் ஜமாத்துலாகிறு பிறை 1-ல் கொடியேற்று விழா நடைபெறும். திரளான மக்கள் வருவார்கள். பிறை 10-ம் நாள் இரவு, நாகையிலிருந்து அதி விமரிசையாக சந்தனக்கூடு புறப்பட்டு வந்து ஆண்டவர்கள் சமாதியில் சந்தனம் பூசும் வைபவம் நடைபெறும். அன்று திரளான மக்கள் சமுத்திரம் நாகூரின்கண் தோன்றியிருப்பது கண்டு களிக்கக் கூடிய முக்கிய கட்டம். பின்னர் பிறை 11-ல் பீர் ஏகுதல் நடைபெறும். பீர் அவர்கள் கடற்கரைக்குப் புறப்படுவார்கள். இறுதியாக 14-ம் இரவு இறுதி கட்டம் அடையும்.

திருகுர்ஆன் வேதபாராயணம் செய்து, கொடி இறக்கப்படும். கந்தூரி காலங்களில் மின்சார அலங்காரம் அபிவிருத்தியடையும். 7 வாயில்களுக்கு மின்சார ஜோடிப்பு கண்ணைப் பறிக்கும். தர்கா வாசல், வடக்கு, மேற்கு,

கிழக்கு, தெற்கு, தர்கா உள்புறம் மற்றும் இடங்கட்கும் மின்சார அமைப்பு அதிகரிக்கப்படும். ஒவ்வொரு மணிக்கும் ஒரு மரியாதை குண்டு முழங்கும். தினமும் அடிக்கடி 5 மினாராக்கட்கும் புது கொடி ஏற்றுவிக்கப்படும்.

தர்காவின் அமைப்புகள் நம் கருத்திற்கும் சிந்தனைக்கும் கவர்ச்சியளிக்கக் கூடியது. அலங்கார வாசல் உள்ளே நுழைந்தவுடன் ஒரு நீண்ட பாதை போன்று அகல விரிந்த பாதை காண்போம். அடுத்து சென்றால் தர்காவின் அமைப்பு அலங்காரம் தென்படும். கண்ணைப் பறிக்கும் சங்கு பல சலவை கற்களால் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. திரளான மக்கள் கண்டுகளிக்கக் கூடிய ஓர் அரிய தெய்வீக கண்காட்சி தர்கா. தர்காவின் அமைப்பையும், அதன் அலங்கார வர்ணனையும் முக்கிய கட்டிடங்களையும் தர்காவின் அமைப்பையும் கோபுரம், குளம் முதலான மற்றும் காட்சிகளை செய்திப்படம் மூலமாக ஆண்டவர் சன்னதி, நாகூரின் புகழ் எல்லாவற்றையும் அப்படியே படமெடுத்து தயாரித்து சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சை, சீர்காழி, கும்பகோணம், காரைக்கால், நாகை மற்றும் பிரபல .ஊரிலெல்லாம் காட்டி மக்களின் பக்திப்பெருக்கை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். மேலும் புகைப்பட நிபுணர்கள், நாகூருக்கு விஜயம் செய்து, புகைப்படங்கள் தயாரித்து, கல்கி, சுதேசமித்திரன், தினமணி மற்றும் பிரபல சஞ்சிகைகளிலும் பிரசுரித்து இருக்கிறார்கள். ஆகவே நாகூர் தர்காவின் அலங்கார அமைப்பையும், வர்ணனையும் அரிய வேண்டுமாயின் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

நாகூர் நாதரின் பொன்மொழிகள்

1. "வாழ்க்கை" என்பது மல்லிகைப்பூ பரப்பிய படுக்கையல்ல. அது சேவையின் பம்பரம்.

2. தன்னை உணர்ந்தவன் தன் இறைவனை அறிகின்றான்.

3. போதுமென்ற மனதுடன் நீ வாழ். செல்வந்தனாகி விடுவாய்.

4. பொய்யே நோயாம். உண்மையே அருமருந்தாம்.

5. அறிவே உடலுக்கு உயிர்; அன்பே கனி; தன்னடக்கமே அதன் பிரதிபலிப்பு.

6. பசித்தவர்கட்கு உணவு, தண்ணீர் வழங்கி உதவி செய்.

7. அளவுக்கு மீறிய ஆசை, மானிடனைக் குருடனாகவும், செவிடனாகவும் செய்து விடுகின்றது.

8. நல்லதைப் பேசுக. முடியாதாயின் வாய்மூடி இருப்பதே சிறந்தது.

9. இன்னலைக் கண்டு இதயம் கலங்காதே! இன்னலின் இறுதியில் இன்பம் உண்டு.

10. பிறர் கஷ்டத்தைப் பார்த்து மனம் மகிழாதே! அது மிருகக் குணத்தைச் சேர்ந்தது.

11. பிறர் குற்றம் காண்பதும், தன் குற்றம் மறைத்தலும் மடமையின் லட்சணம்.

12. நல்லதை நாடு; தீயதை விலக்கிவிடு.

13. வாழ்க்கையில் தீயதை நினைத்து தீயதை அடையாதே.

14. மறுமை வாழ்விற்காக உன் பொருளைத் தர்மம் செய்து பலனைப் பெற்று கொள்வாயாக.

15. உன் நல்ல நினைவால், உன்னைச் செம்மைப் படுத்தி ஆன்மீக சிகிச்சைப் பெற்றுக்கொள்.

16. ஆத்மா சித்தி பெற ஒரு சிறந்த குருவை நாடி உபதேசம் பெற்றுக் கொள்.

17. தூங்கியது போதும், விழித்தெழுந்து நல்லதைச் செய்து கொள்.

18. அர்த்தமற்ற அதிக பேச்சு, ஆபத்தை விளைவிக்கின்றது.

19. துன்பமெனும் முட்செடியில், இன்ப ரோஜா மலர் அரும்புகின்றது.

20. ஆடம்பர வாழ்வு, அழிவிற்கறிகுறி.

21. ஆத்திரம் தோன்றும் சமயம் அவசரப்படாதே. உள்ளத்தைக் குமுறிக் கொதிக்க விடாதே.

22. பசிப்பிணியால் மக்கள் படும் துயரை உனக்கு அதிகப்பசி ஏற்படும் சமயம் சற்று சிந்தனை செய்து பார்.

23. இலட்சியமில்லாத வாழ்க்கை, அச்சாணி இல்லாத தேரைச் சாரும்.

24. நீ நேர்முகமாகவும், மறைமுகமாகவும் செய்வதை இறைவன் தினமும் கவனித்து வருகின்றான்.

25. எவன் வாழ்க்கையில் எல்லை மீறி வருகின்றானோ, அவனது வாழ்வே நெருக்கடியான புதைகுழியாகும்.

26. உங்களிடம் உள்ள பொருள்கள் அழிந்து விடும். இறைவனிடம் உள்ள செல்வமே அழியாத செல்வம்.

27. மறுமைக்குரிய சாதனமின்றி மண்ணறையில் பிரவேசிப்பவர்கள், கப்பலின்றிக் கடல் கடப்பவர் போலாவர்.

28. மானிடனின் அகந்தை, மனிதனை இகழ்ச்சிக்கு வழி காட்டுகிறது.

29. உண்மையிலும், உத்தமமான காரியத்திலும் சிறப்பு பெறுவதற்கு எப்பொழுதும் சேவையாற்றுங்கள்.

30. மனித வாழ்வின் இலட்சியம், மானத்துடன் வாழ்வதே யாகும். மானத்துடன் உயிர் காப்பாற்றப்பட வேண்டும்.

31. வானங்களில் தேடினேன், பூமியிலும் தேடினேன், நான் தேடிய மெய்ப்பொருளை இதயத்தின் இருள் அறையிலேயே கண்டேன்.

32. வாழ்வில் மனோ அமைதியை நீ நாடுவாயாகில், கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைந்துக்கொள். ஏனெனில், பேராசைக்காரனின் வேலை எந்த அளவிலும் திருப்தி பெறாது.

33. வாழ்க்கைப் பூங்காவனத்தில் நீ புகழ்பெற நாடினால், மேன்மைபெற விரும்பினால் மக்களிடையே வாழ்வதற்கு முதலில் கற்றுக்கொள்.

34. தெய்வத்தின் கருணை ஒரு அமுதசுரபி. அது இறைக்க குறையாத வற்றா ஊற்று.

35. கடும் சோதனையைக் கண்டு சிரிப்பவன் அச்சோதனையில் வெற்றி பெறுகின்றான்.

36. ஆபத்துகள் ஏற்படும் சமயம் இறைவனை நினைப்பதும், இன்பத்துறையில் நீராடும் சமயம் இறைவனை மறப்பதும் அறிவுடையோர்கள் செயலன்று.

37. அதிகாரத்தினால் மற்றவர்களை ஆட்சி செய்வதை விட, அன்பினால் ஆட்கொள்வது சாலச் சிறந்தது.

38. இன்பங்களைப் பெற முயற்சி செய்யாதீர்கள். இலட்சியங்களை அடைய முயற்சி செய்யுங்கள்.

39. உன் ஆஸ்திகளைச் செலவிடு. பணப்பெருமையால் ஏழைகளை இகழாதே. உன்னைச் சீர்ப்படுத்திக் கொள்.

40. அறிஞர்களை நெருங்கிக் கல்வியையும், ஒழுக்கம், தூய நடத்தைகளையும் படித்துக் கொள். ஏழை எளியவர் கட்கும், உன் சுற்றத்தார்கட்கும் உன் பொருளைத் தந்து ஆதரவு காட்டு. தூய சிந்தனையுடன் மக்களோடு பழகு. இறைவனின் விதிவிலக்குகளை முதலில் நீ நடந்து, பிறரையும் நடக்க முயற்சி செய். இறைவனைப் பயந்து உன் வணக்கங்களை செய்.

''அஸ்மாவுல் - இளாம்'' என்ற திரு நாமங்களின் பலன்கள்!

இவை, நமது நாயகம் மகான் ஷாஹுல் ஹமீது ஆண்டகை அவர்களுடைய மாண்புமிக்க ''அஸ்மாவுல் - இளாம்'' என்ற திரு நாமங்களை ஓதுவதின் சிறப்புகள் - பலன்கள் வருமாறு: எவனொருவன் வெள்ளி - திங்கள் இரவுகளில் இந்த மாண்புமிக்க இஸ்மை - திருநாமங்களை பக்தியோடு ஓதி வந்தால் அந்நாயகத்தின் கருணையைக் கொண்டு நாடிய நாட்டங்கள் யாவும் நிறைவேறும். அன்றியும் சகல முஸீபத்துக்களும் நீங்கி, அவனுக்கு இம்மை - மறுமையிலும் நன்மை கிடைக்கப்பெறும், என்பதில் சந்தேகமில்லை. இன்னும் இந்த ''அஸ்மாவுல் - இளாம்'' இஸ்மை எழுதி தஃவீஜாக இல்லங்களிலும், வியாபார ஸ்தலங்களிலும் குழந்தை தொட்டில்களிலும், கட்டினால் இறைவனருளால், வியாபாரத்தில் அதிக பரகத் (விருத்தியும்)தும் ரிஜ்க் (இரணம்) விஸ்தீரணமும், பிள்ளைகட்கு பாதுகாப்பும் கொடுக்கப்படும். இன்னும், ஜின், ஷைத்தான், பேய் கண்திருஷ்டி, சூனியம், பகைவர் தீங்கு, யாத்திரையில் நன்மை, திடீர் ஆபத்துகள் முதலிய எல்லா வகையான ஆபத்துகளை விட்டு காப்பாற்றி, நன்மையை கொடுப்பான். மேலும், ஒருவன் வியாபாரத்தில் பரக்கத்தை நாடியோ, அல்லது பிள்ளைகுட்டிகள் உண்டாக நாடியோ, அல்லது எவ்வித காரியத்திலும் வெற்றி பெற நாடியோ, அல்லது இம்மை மறுமையில் பலன்பெற நாடியோ, இந்த புனிதமிக்க அஸ்மாவை 40 நாள் தொடர்ச்சியாக -

விடுத்தமும்; ஓதி முடித்து, நாயகத்திற்கு ஹதியா (அர்ப்பணம்) செய்து தன்னுடைய நாட்டத்தை கேட்டால் இன்ஷா அல்லாஹ், உடனே நிறைவேறி அளவிலா மகிழ்ச்சியடைவான். இன்னும் எவ்வித நாட்டத்தை நாடியும் ஆண்டகை அவர்களது தர்காஷரீபிலிருந்து இதை நாள் ஒன்றுக்கு 11 விடுத்தமாக 10 நாள் ஓதி 11 விடுத்தம் யாஸீனும் ஓதி ஹதியா செய்து தன் ஷாஜத்தை - நாட்டத்தை கேட்டால்; இன்ஷா அல்லாஹ் நிச்சயமாக நிறைவேற்றிக் கொடுப்பார்கள். இந்த பிரார்த்தனைகள் அனைவர்களாலும் ஓதி ஒப்புக்கொள்ளப்பட்டதும், பயன் கண்டு வெற்றியடைந்ததுமாகும். நீங்கள் தவறாது ஓதி பலனடைவீர்களாக: அனைவர்களின் எல்லாவித காரியமும் வெற்றி பெற துஆ கேட்கின்றேன்.

- நூலாசிரியர்

''அஸ்மாவுல் - இளாம்''

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்

(அல்லாஹுஹும்ம ஸல்லிவஸல்லிம் அலாஸய்யிதினா முஹம்மதின் வஅலாஆலி ஸய்யிதினா முஹம்மதின் யாஇலாஹனா, யாமவ்லானா யாஹாதீய்னா, யாமுறப்பீனா, யாமுர்ஷிதினா, யாமததனா யாகௌதனா யாகுத்பனா, யாமுகீதனா, யாஉஸ் தாதனா, யாவஸீலதனா)

அஸ்ஸலாமு அலைக்கும் யாஷாஹுல் ஹமிது ஐனுல்லாஹ்

''	''	யாஸெய்யிது	'' குதுரத்துல்லாஹ்
''	''	யாசுல்தான்	'' சம்சாமுல்லாஹ்
''	''	யாகாதிரு	'' திக்ருல்லாஹ்
''	''	யாகுதுபு	'' ஹபீபுல்லாஹ்
''	''	யாகௌது	'' ஹிர்சுல்லாஹ்
''	''	யாமீறான்	'' கனபுல்லாஹ்
''	''	யாஹாஜி	'' மலிக்குல்லாஹ்
''	''	யாபக்கீர்	'' காலிபுல்லாஹ்
''	''	யாஆஷிகு	'' அஜாஇபுல்லாஹ்
''	''	யாகுத்தூஸ்	'' முறாகிபுல்லாஹ்

முஹம்மதுர் ரசூலுல்லாஹி லாஇலாஹ இல்லல்லாஹு அவ்வலஹு - வஆகிரஹு - வளாகிரஹு - வபாதினஹு யாஹு - யாமன்ஹு யாஹைய்யு - யாகைய்யூம்

அஸ்ஸலாமு அலைக்கும் யாஷாஹுல் ஹமீது ஹிதாயத் துல்லாஹ்

,,	,,	யாமீறான்	,, ரஹ்மதுல்லாஹ்
,,	,,	யாஷெய்கு	,, பழ்ளுல்லாஹ்
,,	,,	யாசெய்யிது	,, அம்ருல்லாஹ்
,,	,,	யாகாதிரு	,, குதரத்துல்லாஹ்
,,	,,	யாசுல்த்தான்	,, இனாயதுல்லாஹ்
,,	,,	யாகவாஜா	,, பர்மானுல்லாஹ்
,,	,,	யாஔளலியா	,, கஷ்புல்லாஹ்
,,	,,	யாகுதுபு	,, அர்ஷுல்லாஹ்
,,	,,	யாஆரிபு	,, ஹபீபுல்லாஹ்
,,	,,	யாகௌது	,, ரபீக்குல்லாஹ்

அல்அமான், அல்அமான், அல்அமான், மின் ஆபாத்தித் துன்யா, அல்அமான் அல்அமான் அல்அமான் மின் ஷர்ரித் துன்யா, அல்அமான் அல்அமான் அல்அமான் மின் ஷர்ரிஷ் ஷைத்தான், யாக தீமல் இஹ்ஸான், அல்அமான், அல்அமான், அல்அமான், மின் ஜமீயில் பலாயி வல்கஹ்ரி, வஸ்ஸிஹ்ரி, குல்ஹுவல்லாஹு அகது அல்லாஹுஸ் ஸமது லம்யலித் வலம்யூலத் வலம்யகுன் லஹுகுபுவன் அகது லகத்குன்த பீகப்லத்தின் மின்காதா பகஷ்ப்னா அன்ககிதா அக பபஷருக்கல் யவ்வமகதீதுன், யாகாதிரு யாகாதிரு யாகாதிரு இன்னீ அஸ்அலுக்க அன்தஹ்ழியல் ஹாஜாத்தி பித்தாரைனி பிகைரின் பிபழ்லின் பிரஹ்மத்திகயா அர்ஹமர் ராஹிமீன், வஸல்லாஹு வஸல்லம் அலாகைரி கல்கிஹி ஸெய்யிதினா முஹம்மதின்வ அலா ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம் அஜ்மயீன் வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

யாஸாஹி பன்னா ஹுரி குன்லீ நாசிரி
பிஸ்ஸம்இ வல் அஃலா வஹுஸ்னில் பாசிரி
வபிதூலி உம்ரின் லாபி உம்ரின் காசிரி
யா மஜ்ம அல் கைராத்தி அப்துல் காதிரி.

ஹமீதிய்யா "துஆ"

யா அல்லாஹ்! யா அல்லாஹ்! யா அல்லாஹ்!

நபிமார்களுக்கும் வலிமார்களுக்கும் கிப்லாவுமான

நாயகம் (ஸல்) அவர்கள்

மீதும், அன்னவர் குடும்பத்தினர்கள் மீதும், நண்பர்கள் மீதும், ஸலவாத் என்னும் கருணையும், சலாமென்னும் ஈடேற்றத்தையும் தந்தருள்வாயாக...!

விண்ணகத்தை விண்மீன்களைக் கொண்டு அழகுப் படுத்திய அல்லாஹ¬வே!

உன்னை நாங்கள் புகழ்கின்றோம்.

மண்ணகத்தை அவ்லியாக்களைக் கொண்டும், குத்புமார்களை கொண்டும், சாலிஹீன்களைக் கொண்டும் அழகுப் படுத்திய அல்லாஹ¬வே!

உன்னை நாங்கள் துதிக்கின்றோம்.

கலகமும், குழப்பமும் நிறைந்த உலகத்தை அவ்லியாக்களைக் கொண்டு அமைதிப்படுத்திய அல்லாஹ¬வே!

நாங்கள் உனக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இறந்துபோன ஷரி அத்திற்கு வலிமார்களைக் கொண்டு புத்துயிர் அளித்த அல்லாஹ¬வே!

உன்னை நாங்கள் புகழ்கின்றோம்.

யா அல்லாஹ்!

அகிலத்திற்கெல்லாம் இதயம் போன்ற உனது குத்புமார்களைக் கொண்டும், அவ்தாதுகளைக் கொண்டும்,

அன்வார்களைக் கொண்டும், அஹ்யார்களைக் கொண்டும், அப்தாலுகளைக் கொண்டும், நுஜபாக்களைக் கொண்டும், உரப்(F)பாக்களைக் கொண்டும், நுகபாக்களைக் கொண்டும் உன்னிடத்தில் நாங்கள் வசீலா தேடுகின்றோம்.

மேலும் தென்னிந்தியாவில் தவ்ஹீதின் முரசை ஒலிக்கச் செய்யும் சைகுல் இஸ்லாம், கௌதுல் அனாம், அஸ்சையது அப்துல்காதிர் ஷாஹுல் ஹமீது நாயகம் அவர்களைக் கொண்டு எங்கள் தேவைகள் அனைத்தையும் உன்னிடத்தில் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்!

குத்புல் அக்தாப் ஷாஹுல் ஹமீது நாயகம் அவர்களின் தர்பாரில் வீசும் சொர்க்கத்தின் காற்றை எங்கள் மீதும் வீசும்படி செய்வாயாக! அந்நாயகமவர்களின் பொருட்டால் எங்களுக்கு ஈமானின் பிரகாசத்தையும், நீண்ட ஆயுளையும் செல்வப் பெருக்கத்தையும், அறிவின் தெளிவையும் தந்தருள்வாயாக!

பரதுல் அஹபாப் செய்யது ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் சைத்தான்களையும், நப்ஸ் அம்மாராவையும் எங்களுக்கு அடிபணியும்படி செய்வாயாக!

சுல்தான் ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் துன்யாவிலும், ஆகிரத்திலும் நற்பதவியைத் தந்தருள்வாயாக!

காதிர் ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் துக்கமும் துயரமும், நோய், பிணி, தரித்திரம், வறுமை ஆகியவை எங்களை வந்து அடையாமல் காத்தருள்வாயாக!

குத்பு ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் எங்களுக்கு நேர் வழியையும், சரீர சுகத்தையும், மார்க்க பக்தியையும் தந்தருள்வாயாக!

கௌதுல் ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் எங்களுக்கு இர்பான் என்னும் ஞானத்தையும், இஸ்க் என்னும் பானத்தையும் தந்தருள்வாயாக!

மீரான் ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் எங்களுக்கும், எங்கள் தீய உணர்வுகளுக்கும் நடக்கும் போராட்டத்தில் எங்களுக்கு வெற்றியைத் தந்தருள்வாயாக! மேலும் உனது வெறுப்பு என்னும் நெருப்பு எங்களை தாக்காமல் பாதுகாத்தருள்வாயாக!

ஹாஜி ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் எங்கள் உடல்களை புராக் என்னும் விண்ணுலக வாகனமாக அமைத்து விடுவாயாக!

மேலும் எங்கள் பேச்சிலும், மூச்சிலும் ஷஹாதத் கலிமாவின் நற்மணம் வீசும்படி செய்வாயாக!

பக்கீர் ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் எங்கள் ஆத்மாக்களுக்கு தொழுகையின் மூலமாக மிஃராஜ் என்னும் நற்பதவியைத் தந்தருள்வாயாக!

ஆஷிக் ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் எங்களுக்கு சைத்தானால் போடப்பட்டிருக்கும் உலக ஆசாபாச மென்னும் சங்கிலியை உடைத்து எறிந்து விடுவாயாக!

மேலும் உனது சோதனையும், வேதனையும் எங்களைப் பிடிக்காமல் காத்தருள்வாயாக!

குத்தூஸ் ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் மரணத்திற்கு அஞ்சாத முஃமீன்களாக எங்களை அமைத்து விடுவாயாக!

ஆரீப் ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் கடலில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கும், தரையில் வசிக்கும் பக்தர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பாயாக!

அவ்லியா ஹமீது நாயகம் அவர்களின் பொருட்டால் எங்கள் முகங்களையும் அகங்களையும் பிரகாசிக்கும்படி செய்வாயாக! குத்பு ஜமான் நாயகம் அவர்களின் பொருட்டால் எங்கள் காரியங்களை எளிதாக்கி வைப்பாயாக!

எங்கள் கருமங்களை அழகாக ஆக்கி வைப்பாயாக!

எங்கள் அமல்களை ஏற்றுக் கொள்வாயாக!

எங்கள் உடல்களை ஸ்திரப்படுத்தி வைப்பாயாக!

மனிதர்களுக்கும், ஜின்களுக்கும் குத்பாக அனுப்பப்பட்ட நாகூர் நாயகம் அவர்களின் பொருட்டால் எங்கள் பெற்றோர்கள், மனைவி, மக்கள், உற்றார் உறவினர்கள் யாவரும்; உனது அவ்லியாக்களை நேசிக்கும் ஆண் பெண் யாவருக்கும் சாலிஹான குழந்தைகளை தந்து அருள்வாயாக!

*மேலும் எங்களுக்கும் அன்னவர்களுக்கும் இரு லோகத்திலும் **நாயகம் (ஸல்) அவர்களின் அன்பைத்** தந்தருள்வாயாக! ஆமீன் - ஆமீன் யாரப்புல் ஆலமீன்.*

நாகூர் ஆண்டவரின் வாழ்க்கைக் குறிப்புகள்

இயற்பெயர் : ஷாஹுல் ஹமீது

தோற்றம் : ஹிஜ்ரி 10.3.910 கி.பி. 1490

பிறப்பிடம் : மாணிக்கப்பூர் அயோத்தி மாகாணம்.

*தந்தை : **சையிது ஹஸன் குத்தூஸ்** (றலி)*

*தாய் : **சையிது பாத்திமா** (றலி)*

கல்வி பயின்றது : 18 வருடம்

ஞானாசிரியர் : சையிது முகம்மது கௌது குவாலீரி (றஹ்)

தேசாந்திர யாத்திரைகள் : 12 வருடம்

நாகூர் வருகை : வயது 40

நாகூரில் தரிப்பாடு : 28 வருடம்

சீடர்கள் : 404

மறைவு : ஹிஜ்ரி 10.6.978 கி.பி. 1550

Short Biography of Holy

SAINT HAZARATH SHAHUL HAMEED

of Nagore Durgah Sheriff

This famous Holy Saint was born in Manickapur near Ayodyah (OUDH) in the United provinces of India, Hijiri 910 on a Friday early morning in the Arabic month of 10th Jamathul-Akhir (1491-A.D.).

The Holy Saint was the 23rd lineal descendant of the Holy prophet Mohammed the prophet of Islam.

His father was Hazarath Syed Hasan Kuddus Sahib and his mother Beebi Fathima.

Even before His birth a Messenger of God appeared before. His mother Beebi Fathima in a dream and predicted that she would be blessed with a son who would be the Saviour of people and the captain of Islam. Even as a child, He showed signs of great wisdom, intense piety and divine communion. Before He was eight years old. He learnt Arabic dialect and its grammer.

He went in search of a religious preceptor (Guru) who could instruct Him in solving the enigmas and the mysteries of the world and who could teach him more about God and His ways and at His parent's desire, went to Gwalior to be initiated by Hazarath Syed Mohamed Ghouse Sahib in divine knowledge.

After 10 years of training. He left Gwalior and went to Manickapur with a party of 404 disciples and then toured extensively with his disciples in Afghanistan Baluchistan and other places performing innumerable miracles on the way by raising the dead, making the dumb to speak and the lame to walk and by curing all kinds of incurable diseases.

On His way to Mecca (Saudi Arabia). He halted in a Mosque at Lahore where a rich and respectable Mohammaden Kazi Hazarath Noordin Sahib approached Him to be blessed with a child.

The Saint, His Holiness Hazarath Syed Shahul Hameed (Nagore Andavargal) sent for the said Noordin's wife Beebi Johara, chewed betels and nuts, and gave it to Noordin to be handed over to his wife Beebi Johara, and ordained that she should swallow it and remain separated from her husband for 40 days.

He prayed God to bless Noordin with children; and also informed Noordin that the eldest son should be dedicated to him as His son and asked Noordin to remain with Him for 40 days without seeing his wife.

As per His blessings, Beebi Johara conceived and gave birth to a son on the 12th of Rajab Hijiri 959 and the child was named Syed Mohammed Yoosuf Sahib as directed by the Holy Saint.

The child was properly educated and in his 7th year took leave of his parents to go and meet his real father at Mecca as he heard a divine voice informing him that his father

(Hazarath Syed Shahul Hameed Quadir Oli) was awaiting his arrival at Mecca. So he went to Mecca and joined his father there.

The Saint, His son and 404 followers disciples visited Ponnani Sri Lankai, Kayalpattinam, Keelakarai and Thenkasi and propagated Islam.

Lastly the saint visited Thanjavur. At that time the Naick dynasty was rulling over Thanjavur. The king Achuthuppa Naikan, then the ruler of Thanjavur was suffering from a grievous and prolonged malady. The ministry of the King begged the saint, and requested him to visit the palace and cure the malady of the king.

The Saint was very much moved, went to the palace and found that a dove was made to suffer by blackmagic, with pin pricks all over its body and it was in a very precarious condition, and it was the cause of the King's aliment. At once, He asked his son to bring the dove prayed and removed one by one the pins in the body of the dove. After the removal of the pins, the king recovered and got well.

The queen over joyed at the miraculous one of her husband, fell on her kness before the Saint and begged the Saint to bless them with children. The Saint accordingly blessed them with a fruitful progeny and in return the Rajah offered wealth and rich presents which the Saint did not accept but only asked the Raja to give Him a piece of land near sea-shore.

Accordingly the Raja dedicated 30 acres of land called 'Havely' and submitted the same to the Holy Saint, on which the present buildings and premises of "Nagore Durgah" stands.

He remained in this place till the end of His life with His son.

As per His instruction, His son Hazarath Syed Mohamed Yoosuf Sahib married the daughter named Syed Sultan Beevi Amma Sahiba of Khaja Mahadoomul Yamani of West Nagore. He got eight children-six males and two daughters.

The Saint went to Vanjoor nearly 2 miles away from the northern side of nNgore and in the Arabic month of Rajab fasted there for 40 days in a precovered with a plank on which site the present Vanjoor pallivasal stands and also fasted 40 days at Silladi pallivasal near sea shore of Nagore.

The Holy Saint demised in His 68th year on a Friday early morning in Hijiri 978 and was entombed at Nagore according to His directer.

On the right side of the Holy Saint the tomb of His son Hazarath Syed Mohamed Yoosuf Sahib and the tomb of His wife Syed Sultan Beebi Amma Sahiba are situated.

The Maharatta king of Thanjavur Tulast Maharaja, endowed 15 villages 4000 acres of Nanja - Punja lands for the maintenance of the Durgah.

His father Pratab Sing Maharaja built the Big Minaret which stands infront of the Durgah. It was built and completed 199 years after the demise of the Holy Saint. Its height is 131 feet. This is the 5th minaret.

The other four minarets are inside the premises of Durga.

The 1st minaret was built by Ibrahim Khan of Senchi which is inside the premises and its height is 77 feet.

The 2nd minaret was built by Nalla Saiyeed Maricar of Nagapattinam to the height of 93 ½ feet.

The 3rd minaret was built by the same person and its height is 93 ¼ feet.

The 4th minaret was built by Judge Dawood-Khan of Parangipettai (Porto-Novo) and its height is 80 feet.

The Miracles of the Holy Saint had not stopped with His demise but continues to the present day.

The people of all castes and crees are visiting Nagore Durgah daily for worshipping the Holy - Saint without and distinction.

Pilgrims have their opportunity to see the articles kept separately inside the premises of the Durgah which have come out from the months of the various distressed people with their indications of His Miracles and amazing divine power of the Holy Saint.

The Nagore Durgah is an object of Great veneration not only for Muslims but also for people of other religions.

The Holy Saint came to Nagore on Thursday. So every Thursday large congregation worshippers visit the Durgah and make their offerings to the Holy Saint. The Anniversary of the Holy Saint is celebrated every year for 14 days commencing from the 1st day of the Arabic month of "Jamathul Akhir". The

festival known as "The Grand Kandur Festival" attracts lakhs of pilgrims from all parts of India and abroad.

The Durgah is managed by eight Hereditary Trustees (Nattamaigars) who are the lineal descendants of the Holy Saint's son Hazarath Syed Mohamed Yoosuf Sahib.

After meeting the expenses of the Durgah the surplus income derived from the lands and offerings is distributed among the 640 kasupangudars (the descendants of the Saint's son).

The Holy Saint born	Hijiri	910
- do- demised	Hijiri	978
Stay with his Father	Hijiri	18 Years
Stay with his Guru	Hijiri	10 Years
Desa Sanjaram (Propagation on Religion)	Hijiri	12 Years
Stay at Nagore	Hijiri	28 Years

Thank for Durgah

உண்மை நிகழ்ச்சிகள்

உடல்நலம் பெற்றவர்கள் பாராட்டுகிறார்கள்!

சமீபத்தில் நிகழ்ந்த அற்புத ஆபரேஷன் ஒன்று குறிப்பிடத்தக்கது. நாகூர்வாசி சே.மு. எஹ்யா மரைக்காயர் 'ஸிஹ்ர்' எனும் சூனியஞ் செய்யப்பட்டு அதனாலேற்பட்ட தாங்கொணா வயிற்று வலியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். பல டாக்டர்கள் பார்த்தும் பலவித சிகிச்சைகள் செய்தும் தீராது இறுதியாக நாகூர் நாயகரே தஞ்சமெனத் தர்காவில் தங்கிவிட்டார். அவர் அங்கிருக்கையில் வாந்தியெடுத்த போதெல்லாம் ஊசிகள் வயிற்றிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. சில மாதங்களுக்குப்பின் ஓர் வெள்ளிக்கிழமை இரவு அவர் அயர்ந்து நித்திரை செய்கையில் பெரியாரொருவர் கத்தியுடன் கனவில் தோன்றி, அவரது வயிற்றைக் கீறிப் பிளந்து ஒரு பொம்மையை வெளியிலெடுத்தெறிந்தார்கள். அவர் அலறி சத்தமிடவே, பக்கத்திலிருந்தவர்கள் சென்று பார்க்க, அவர் பிரக்ஞையின்றி இரத்தத்தில் புரண்டு கிடப்பதையும் பக்கத்தில் ஊசிகள் குத்தப்பட்ட, மாவால் செய்யப்பட்ட ஒரு பொம்மை கிடப்பதையும் கண்டு திடுக்கிட்டுப் போயினர். இரத்தந்தோய்ந்த அவரது அங்கியைக் கழற்றியபோது தொப்புளிலிருந்து நெஞ்சுக்குழி வரையில் இரத்தம் உறைந்திருந்தது. அதைத் துடைத்துவிட்டுக் கூர்ந்து நோக்கிய பொழுது, முள்ளின் முனை கொண்டு கீறினாற்போல் ஒரு கீறல்தான் காணப்பட்டதேயன்றி எவ்வித காயமும் காணப்படவில்லை. சிலையும் புதைந்து நீற்றுச் சாம்பலாயிற்று. அவ்வமயம் தர்காவில் உற்சவ காலமானதால், பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்த 'ஆபரேஷனை'க் கண்டு

பேராச்சரியப்பட்டனர். இன்னும் பல எண்ணிக்கையில்லா அற்புதாதி காரணங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

ஆண்டவர்களது இயற்கை செயற்கைகள் மானிடர்களின் இருதயங்களைத் திடுக்குறச் செய்யும் ஆற்றலுடையவை. இவர்களின் திருநாமம் ஆபத்திற்கு அருமருந்தாயும், உபதேசம் மோட்சத்திற்கு மூல மந்திரமாயும், கிரியைகள் பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தையே புனருத்தாரணஞ் செய்வனவாயும் நின்று விளங்குகின்றன. கடல் போல் விரிந்த இவர்களது மகிமைகளைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ!

பெரியாரைப் பழித்த வினை!
பிளவை நோய் நிவர்த்தி

அக்காலத்திலே நாகப்பட்டினத்தில் செல்வந்தரும் முஸ்லிம் ஜமா அத்தின் தலைவருமாயிருந்த இராய குஞ்சாலி மரைக்காயர் கீர்த்திப் பிரதாபத்துடன் வாழ்ந்து வந்தார். நாகையில் மரைக்காயர் மஸ்ஜிது என்று கூறப்படும் குத்பா பள்ளிவாசல் அவர் காலத்தில் அவரால் கட்டப்பட்டதாகும். டச்சுக்காரர்களது ஆட்சியின் காலத்தில் அரசாங்கத்திலும், பிற சமூகத்திலும் செல்வாக்கு பெற்றவராயிருந்தார்.

ஆண்டவர்கள் நாகூரிலிருந்த காலத்தில், நாகை முஸ்லிம்கள் அங்கு சென்று, அவர்களைத் தரிசனம் செய்து போவது வழக்கமாயிருந்தது. இது இராயகுஞ்சாலி மரைக்காயருக்குப் பெருத்தக் கேடாயிருந்தது. அவர் ஆண்டவர்களை ஏளனமாகக் கூறி (அதாவது பழித்துக்கூறி) அந்தப் பக்கிரிடம் - மகான் பெரியாரிடம் யாரும் போகக் கூடாதென்று கடிந்து பேசி தடை செய்துவிட்டார். தலைவரின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு யாரும் செல்லாமல் நின்று விட்டனர்.

ஆண்டவனின் கோபப் பார்வை உண்டாகி, ஆண்டவர்களைத் தூஷணமாகக் கூறிய மரைக்காயரின் வாயில் பிளவை கிளம்பி, வீங்கி வெடித்துப் புழுக்கள் சொரிந்தன. அவர் செய்து கொண்ட பரிகாரப் பக்குவங்க ளெல்லாம் பயனற்றுப் போயின. ஆண்டவனின் நேசரை அவதூறு பேசிய கரும நோய்க்குப் பரிகாரம் ஏது? அவனது நேயரை அவமதித்து நிந்திப்பது இறைவனை நிந்திப்ப தாகும் அன்றோ? அவர்களுக்கு நோவினை செய்தவன், ஆண்டவனுக்கு நோவினை செய்தவனாவான் அல்லவா? ஆகையால் மரைக்காயர் தேடிய சிகிச்சைகள் எல்லாம் பழுதாயின. விட்டவனைத் தவிர நீக்குவான் யாருமின்றி அந்த சண்டாள நோய் கொடுத்துக் கொண்டிருந்த வேதனை கொஞ்சமன்று மருந்துக்கும், மந்திரத்துக்கும் கட்டுப்படாத அந்த கரும வியாதி, மன்னிப்புத் தேடலைக் கொண்டே யல்லாது வேறு வழியில்லாததைக் கண்ட மரைக்காயரின் நண்பர் சையிது மகதூம் என்பவர் அவரைப் பல்லக்கிலேற்றி ஆண்டவர்களின் சமூகத்திற்கு அழைத்துச் சென்று அவருக்காகப் பரிந்து பேசி மன்றாடினார். மரைக்காயரும் பட்ட மரம்போல் ஆண்டவர்களின் பாதத்தில் விழுந்து மன்னிப்புத் தேடி இரட்சிக்கும்படி அழுது புலம்பினார்.

ஆண்டவர்கள் அவர்பால் மனமிரங்கி, வாயைத் திறக்கச் செய்து தேவாமுதம் போன்ற தங்களது எச்சிலை உமிழ்ந்தார்கள். அந்த கரும நோய் காணாமற் பறந்தோடியது. அவரும் சுகம் பெற்றார். அவர் மகானின் திருவடிகளை முத்தமிட்டு, சென்றுவர உத்தரவு பெற்றுக் கொண்டு நாகை வந்து சேர்ந்தார்.

ஆண்டகை அவர்களின் அற்புதச் செயல்கள்!
வாதம் நிவர்த்தியானது

எனக்கு ஆறு மாத காலமாக முடக்கு நோயால் ஒரு பக்கமே பாதிக்கப்பட்டது. பம்பாயிலுள்ள பிரபல டாக்டர்களின் சிகிச்சையினால் பயனடையவில்லை.

டாக்டர்கள் குணப்படுத்த முடியாது எனக் கூறிவிட்டனர். மேலே கூறிய வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கும் சையித் அஸ்லம் சாயபு அவர்கட்கு இது பெரும் அதிர்ச்சியையும், மன வேதனையையும் தந்தது; மனம் சஞ்சலமடைந்தார், வருந்தினார், அழுதார், என்ன செய்வது?

வாணியம்பாடியிலிருந்து பம்பாயில் வந்து தோல் வியாபாரம் செய்து கொண்டிருந்த நண்பர் அப்துல் நபி சாயபு அவர்கள், தன்னுடைய நண்பர் சையிது அஸ்லம் வியாதியினால் பீடிக்கப்பட்டு அவதியுறுவதைக் கண்டார். மிக மனம் வருந்தினார்; கவலைப்பட்டார். மேலும், அந்த சமயம் அப்துல் நபி சாயபு நாகூர் வந்து ஆண்டகையவர்களை (ஜியாரத்) தரிசனம் செய்துகொண்டு செல்லும்போது, ஆண்டகையின் சமாதி போர்வைத் துண்டை (துணியை) எடுத்துச் சென்றார். நண்பர் சையிது அஸ்லமை இந்நிலையில் கண்டு மிக வருந்தி மேற்படி தாம் கொண்டுவந்த சமாதியின் துணி (போர்வை)யை நண்பரிடம் கொடுத்து, ''நண்பரே, நீர் இதை நாகூர் ஆண்டவர்கள் மீது உண்மையான பக்தியுடனும், விசுவாசத்துடனும் உம்முடைய கையிலே கட்டிக்கொள்வீராக! விரைவில் உம் வியாதி குணமாகி விடும்'' என்றார். இதைச் செவிமடுத்த சையிது அஸ்லம் உண்மையான மனதுடன் ஆண்டவர்களுடைய சமாதி மேல் விரிக்கப்பட்டிருக்கிற போர்வை (துணி)யைக் கையிலே கட்டிக் கொண்டார். ஆச்சரியம்! அன்றிரவே சையிது அஸ்லமுடைய கனவில் ஆண்டவர்கள் தோன்றி, ''பக்த நண்பா! கவலைப்படாதே! பயப்படாதே! இறைவனுடைய கிருபையால் சீக்கிரம் குணமாகிவிடும்; அஞ்ச வேண்டாம், பொறுமையைக் கைக்கொள்வீராக'' என்று உரைத்தார்களாம்.

இவ்வாறு கண்ட பிரஸ்தாப நண்பர் விழித்ததும் அவரது வாதத்தால் பாதிக்கப்பட்ட அங்கம் (கைகால்) கொஞ்சம் கொஞ்சமாகக் குணமானது. இவ்விதம் ஒரு மாதத்திற்குள்ளாக, நடக்க முடியாத சையித் அஸ்லம் பூரண குணமடைந்தார். உடன் பம்பாயிலிருந்தே கால் நடையாக

90 நாள் பிரயாணத்தில் நாகூர் ஆண்டவர்கள் சன்னிதானத்திற்கு வந்து சேர்ந்தார். சேர்ந்து ஆண்டவர்கட்குக் காணிக்கை செலுத்தினார். இது உண்மையான சம்பவம் கட்டுக்கதையல்ல.

பம்பாய் புறப்பாடு 24.8.55.

நாகூர் வந்து சேர்ந்தது 24.11.55

ஜனாப் சையிது அஸ்லம்,
S/O. ஹாஜி சையிது முகம்மது ஷரீப் சாயபு,
முத்தவல்லி - நவாப் மஸ்ஜித் மாஹின்,
பம்பாய் - 16.

கண்கொடுத்த நாகூர் ஆண்டவர்!

மதிப்பிற்குரிய எனது இரு கண்களைவிட, எனது ஆத்மாவைவிட, உலகத்திலேயே மேலான சக்திக்குரிய கடவுள் என்று நினைக்கும்படியான, பொது எல்லாக் கடவுளைவிட, ஒரே சக்தி பொருந்திய நாகூர் ஆண்டவர் முன்னிலையில், அநேகர் அறிய, கண்ணுக்குக் கண்ணாக உண்மைக்கும் நேர்மைக்கும் சாட்சியாக - பக்தர்களாகிய மற்றவர்களும் அறிந்து கொள்ளும்படியாக - எனது மனச்சாட்சியுடன் நான் எழுதிக் கொடுத்த, நடந்த அற்புத நிகழ்ச்சி வருமாறு:

ஐயா, எனது அருமையான நாகூர் ஸ்தலத்திற்கு வரும் பக்தர்களே! சற்று கவனியுங்கள். எனக்கு வயது 26. என்னை இரத்த வெறியன் என்ற பாம்பு ஒன்று கடித்து விட்டது. உடனே அந்த விஷக்கடிக்குத் தகுந்த சிகிச்சைகள் செய்தேன்; குணமடைந்தேன். அப்போது நல்ல நிலைமையுடன் எனது ஊரைவிட்டு ராஜபாளையம் என்ற மற்றொரு ஊருக்குச் சென்று உபாத்தியாயர் தொழில் செய்து கொண்டிருந்தேன். அப்போது என்னிடம் படித்துவரும் பிள்ளைகள் என்பேரில் உள்ள விசுவாசத்தின் காரணமாக, அவர்களில் ஒருவர் ஆசிரியர் என்ற முறையில் என்னிடம் ஒரு கோழியைக் கொண்டு வந்து கொடுத்தார். நான் அதனை அன்புடன்

பெற்று அறுத்து சமைத்துச் சாப்பிட்டு விட்டேன். இது விஷயத்தை எனது நண்பர்களிடம் சொல்லிக் காண்பித்தேன். அதற்கு அவர்கள், ''பாம்பு கடித்த பிறகு ஆறு மாதங்களுக்குக் கோழிக்கறி சாப்பிடக்கூடாதே'' என்று சொன்னார்கள். பிறகு நான் அதற்காக வைத்தியரிடம் சொல்லி மருந்து சாப்பிட்டேன். அதைப்பற்றிக் கவலைப் படவுமில்லை. இப்படிச் சாப்பிட்டு வரும் மூன்றாம் மாதம், பள்ளிக்கூடத்திற்குச் சென்று உட்கார்ந்து இருந்தேன். எனக்கு ஒருவிதமான மயக்கம் வந்தது. படுத்துறங்கி எழுந்தேன். அப்போது என் இரு கண்களும் தெரியவில்லை. அதற்கு வேண்டிய சிகிச்சைகளை நான் பார்க்காத இடமெல்லாம் போய்ப் பார்த்துவிட்டேன். அப்படியிருக்க, ஒருநாள் இரவு நான் படுத்துறங்கிக் கொண்டிருக்கும்போது, ஒரு பெரிய மகான் என் கனவில் தோன்றித் தட்டி எழுப்பி ''நேராகக் கிழக்கு சமுத்திரக்கரையில், என்னுடைய சன்னிதானத்திற்கு விரைந்து புறப்பட்டு வா!'' என்று கூறிவிட்டு மறைந்து போனார்கள். உடனே ஆச்சரியத்துடன் எழுந்து என் மனைவியை எழுப்பிக் கனவில் நடந்த சங்கதிகளைச் சொன்னேன். மேலும் நம் ஊரிலுள்ள பெரியோர்களான முஸ்லிம்களிடமும் சொல்லிக் காண்பித்து, ''அந்த சன்னிதானம் எங்கு உள்ளது?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ''அது நாகூர் ஆண்டவர் சன்னிதானம் தான்'' என்று சொன்னார்கள். ஆகவே, ஒரு வருடம் 3 மாத காலமாக எனக்கு ஒருவராலும் வைத்தியம் செய்ய முடிய வில்லையே என்று நினைத்து, நாகூர் ஆண்டவர் பேரில் எனக்குள்ள பக்தி விசுவாச நம்பிக்கையைக் கொண்டு ஊரைவிட்டு அன்றைய தினமே கால் நடையாகப் புறப்பட்டு 84 கிராமாந்தரமாக நடந்து வரலானேன். வரும் பாதையில் கொள்ளிடம் வந்து சேர்ந்தேன்.

கொள்ளிடத்திலிருந்து எனது வழிப் பிரயாணத்தைக் கேட்டுக்கொண்டு, நண்பர் சையிது அப்துல்லா சாயபு என்ற கனவான், நாகூரார் கிருபையினால், எனக்குக்

கொள்ளிடத்திலிருந்து நாகப்பட்டினம் வரைக்கும் டிக்கட் எடுத்துக் கொடுத்தார்.

நான் அதைவிட்டுப் பிரயாணமாகி, என் மனைவியுடன் காலை 11 மணிக்குள்ளாக 'நாகூர் தர்கா' ஆண்டவர் சன்னிதானம் வந்து சேர்ந்தேன். வந்த அன்றைய தினமே, இரவு படுத்து நித்திரை செய்து காலை 4.30 மணி சுமாருக்கு கண்களைத் திறந்து பார்த்தேன். என்ன அற்புதம்! எனது கண்களுக்கு 1½ வருடம் இல்லாத ஒளியுடன் பார்வை வந்துவிட்டது. மேன்மைமிகு எனது நாகூர் ஆண்டவர் உலகத்தில் எனக்குக் கண்களைக் கொடுத்துக் காப்பாற்றினார். உலக சரித்திரத்திலேயே கண்டிராத அற்புத நிகழ்ச்சிகள். இவை போன்ற எண்ணற்ற அற்புத காரணங்கள் இன்றும் நடைபெற்றிலங்கும் கருணைக் கடலாம் நாகூர் ஆண்டவருக்கு வணக்கம் செலுத்துகிறேன்.

இங்ஙனம்,

அ.க. ராஜு பிள்ளை

உபாத்தியாயர்,

(திருக்கழுக்குன்றம் (P.O.), செங்கற்பட்டு ஜில்லா)